கடற்கரை
புனித அந்தோணியார்
திருத்தலம்
பாலவாக்கம்

# கிழக்கு கடற்கரை ராகம்

விலை ரூ. 20/-

ஜூன் 2025 மாத இதழ்

ஆண்டு சந்தா ரூ. 250/-



## நாடி வரும் பக்தர்களுக்கு நலம் பயக்கும் கோடி அற்புதரே!

# புனரமைக்கப்பட்ட திருத்தல திருத்தூயக நிகழ்வுகள்
















# கிழக்கு கடற்கரை ராகம்

**ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்**
அருட்பணி. **காணிக்கைராஜ் G**

**ஆசிரியர் குழு**
அருட்பணி. **ஜேசு**
அருட்பணி. **அந்தோணி ஜோசப்**
திரு. **ரோனா ஆல்பர்ட்**
திரு. **காந்தி ரோஸ்**
திரு. **லூர்து எஸ்.ராஜ்**
திருமதி. **நற்கருணைமேரி**
திருமதி. **அஜீன் விக்டர்**

**வடிவமைப்பு**
**GB.பிரிண்டர்ஸ்**

**அச்சில் உதவி**
**L.சுபாஷினி**

**திருத்தல முகவரி**
பாலவாக்கம் கடற்கரை
புனித அந்தோணியார் திருத்தலம்
38, எம்.ஜி.ஆர்.சாலை
பாலவாக்கம், சென்னை – 41
தொ.பேசி: **(044) 2449 3684, 2449 3442**
**மின்னஞ்சல்:** seashorestantony@yhoo.co.in
**இணையம்: www.seashorestanthony.org**

## உள்ளே...

ராகம் – 111

## ஜூன்– 2025

ஆசிரியர் பக்கம் ....... 02

இளையோரைத் தேடும் இறைவன்
அருட்பணி. **ஜேசு** ....... 03

ஞாயிறு மறையுரைகள்
முனைவர். **அந்தோணி ஜோசப்** ....... 06

நம்முடன் தூய ஆவியார்
**ரோனா ஆல்பர்ட்** ....... 14

பதுவை புனித அந்தோணியார் ........ 19

வாருங்கள் செபியுங்கள்
உங்கள் ஜெபம் வீண் போகாது ....... 21

தாக்கத் தாக்க தாக்கத்தை ஏற்படுத்திய இயேசு
**காந்தி ரோஸ்** ........ 22

பத்துப் பேருக்காக
**லூர்து எஸ். ராஜ்** ........ 26

“அன்பு இயேசுவின் அன்பு அது அளவிட முடியாத”
திருமதி. **நற்கருணைமேரி** ....... 29

என்றும் வாழும் நம் அன்னை
திருமதி. **அஜீன் விக்டர்** ....... 30

World Environment Day ........ 31



# அருட்பணி. காணிக்கைராஜ்
## திருத்தல அதிபர்

**அன்புள்ள கடற்கரை ராகம் வாசக நண்பர்களுக்கு,**

அன்புள்ள‘கடற்கரைராகம்’ வாசக அன்பர்களுக்கு,அன்பார்ந்த வணக்கத்தையும் செபங்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.புனித அந்தோணியாரின் பரிந்துரையால்நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் நலமுடனும், மகிழ்வுடனும் வாழ இறைவனிடம் செபிக்கிறேன்.

இம்மாதம்முதல் நாள் (01.06.2025) ஞாயிற்றுக்கிழமைமாலை 6.00 மணிக்குநம் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மேதகு நீதிநாதன் ஆண்டகை தலைமையில் புனரமைக்கப்பட்டதிருத்தல திருத்துயக அர்ச்சிப்பு விழா மற்றும் புதிய நற்கருணை சிற்றாலயத் திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது.ஆயர் தலைமையில் நடைபெறும்இந்தஆலய அர்ச்சிப்புப் பெருவிழாவில் புனித அந்தோணியாரின் பக்தர்கள் யாவரும் தங்கள் குடும்பத்தோடு பங்கேற்க வேண்டுகிறேன்.புனித அந்தோணியாரின் ஆலயம்நம் எல்லோருக்கும் இறையருளை நிறைவாய்ப் பெற்றுத் தருகின்றது என்ற நன்றி உணர்வோடு இத்திருநிகழ்வில் பங்கேற்று நிறைவான இறையாசீரைப் பெற்றுச் செல்ல மகிழ்வுடன் அழைக்கிறேன்.

நம் திருத்தலத்தின் 25ஆம்ஆண்டுப் பெருவிழாஇம்மாதம்சிறப்பிக்கப்படுகிறது.புனித அந்தோணியாரின் பக்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி இறைவனுக்கு நன்றி கூற அமைந்த புனிதரின் திருவிழா ஜூன்10,11,12,13 ஆகிய நாட்களில் கொண்டாடப்படுகிறது. ஜூன் 10 ஆம் நாள் சிவகங்கைமறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர்லூர்து ஆனந்தம் அவர்கள் தலைமையில் திருக்கொடியேற்ற விழாவும்,ஜூன்11 அன்றுபாண்டிகடலூர் உயர்மறை மாவட்ட பேராயர் மேதகு பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் நற்கருணை பெருவிழாவும், ஜூன் 12 அன்றுநம் செங்கல்பட்டுமறைமாவட்ட ஆயர் மேதகு நீதிநாதன் தலைமையில் திருத்தேர் திருவிழாவும், ஜூன் 13 அன்று சேலம் மறைமாவட்ட மேனாள் ஆயர் மேதகு சிங்கராயர் தலைமையில்திருக்கொடியிறக்க விழாவும் நடைபெறுகிறது.

இறைவனுடைய ஆசீரால் வல்லமையைப் பெற்றுள்ள நம் புனிதரின் பரிந்துரை வழியாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளின் அனுபவங்களை நம்மால் மறக்க முடியாது.எனவே இந்தநன்றியின் விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கஅன்புடன் அழைக்கிறேன்.

அன்புடன்
பங்குத்தந்தை **G.காணிக்கைராஜ்**
திருத்தல அதிபர்



# இளையோரைத் தேடும் இறைவன்

அருட்பணி. ஜேசு
திருத்தல உதவித் தந்தை

இளையோர் என்று சொன்னாலே சட்டென மனதுக்குள் வருகின்ற ஒரு வசனம் உண்டு. "உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே” என புது மொழிபெயர்ப்பும், "உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என பழைய வடிவமும் சொல்கின்ற வசனம்தான் அது!

ஒரு வீட்டின் வலிமை, வீட்டிலுள்ள இளைஞர்களின் நடத்தையில் அமைகிறது. ஒரு ஊரின் பலம் அந்த ஊரிலுள்ள இளைஞர் பட்டாளத்தினால் அமைகிறது. ஒரு நாட்டின் சக்தி அந்த நாட்டிலுள்ள இளையவரினால் கட்டமைக்கப்படுகிறது. அதேபோல ஆன்மிகத்தின் வலிமையும் இறை பக்தியுள்ள இளைஞர்களால் தான் அமைகிறது.

இன்றைய உலகம் இளைஞர்களை வசீகர வலைகள் வீசி இழுக்கிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என அது புதிய தத்துவங்களை இளைஞர்கள் முன்னால் விரிக்கிறது. ஆன்மீகத்தையெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம் இளமை இருக்கும் வரை உலகை ரசி என திசைமாற்றும் திட்டங்களை அது முன்மொழிகிறது. டிஜிடல் வடிவங்களில் அது தொழில்நுட்ப லூசிபர்களை தரவிறக்கம் செய்கிறது.

“ கிறிஸ்தவமோ "குழந்தைப் பருவத்திலும், இளமைப்பருவத்திலும், முதுமைப்பருவத்திலும் படைத்தவரை மறவாதே” என தெளிவான கட்டளையைத் தருகிறது.

குழந்தைகள் களங்கமற்றவர்கள், ஆனால் அவர்களால் தீவிரமாய்ச் செயல்பட முடியாது. முதியவர்கள் அனுபவம் நிறைந்தவர்கள், ஆனால் அவர்களிடம் வலிமை இருப்பதில்லை. இரண்டும் கலந்த கலவையாய் இருப்பவர்கள் இளையவர்களே. அந்த இளைஞர்கள் இறைவனுக்காய் நிமிரும்போது தலைமுறைகள் சீராகின்றன.

ஒரு தாவீதின் திறமை ஏற்படுத்திய மாற்றமும், ஒரு யோசேப்பின் தூய்மை உருவாக்கிய தாக்கமும், ஒரு தானியேலின் விசுவாசம் உருவாக்கிய எழுச்சியும் விவிலியத்தில் பொறிக்கப்பட்டுள்ள உதாரணங்களில் சில. அதே போல வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ள உதாரணங்களைப் பார்க்க வேண்டுமெனில் இரத்த சாட்சிகளின் சாட்சிகளின் வாழ்க்கையைப் புரட்டிப் பார்த்தாலே போதும்

இளமையில் ஒருவன் இறைவனிடம் வருகிறானெனில் அவனது வலிமை இயேசுவுக்காய் நீண்ட நாட்கள் செயலாற்ற வைக்கும். தீவிரமாகவும், சுவையாகவும் கனிகொடுக்க முடியும். தடுமாற்றங்களற்ற தெளிவான சிந்தனையும், செயல்பாடும் இளைய மனதுக்கே உரிய சிறப்பம்சங்கள்.

இளமையில் ஒருவன் இறைவனிடம் வருகிறானெனில் அவன் கற்றுக் கொள்பவனாகவும், கற்றுக் கொண்டதை செயல்படுத்துபவனாகவும் இருக்க முடியும். அவனது அறிவு இறைவனுக்காய் வீரியமாய் வெளிப்படும்.

இளமையில் ஒருவன் இறைவனிடம் வருகிறானெனில் வழியெங்கும் கிடக்கின்ற கண்ணி வெடிகளை அவன் தவிர்த்து விட முடியும். உடலையும் ஆன்மாவையும் அழிக்கும் பழக்கங்களுக்கு அவன் விடை கொடுக்க முடியும்.

அப்படிப்பட்ட இளைஞர்களை இறைவன் தேடுகிறார். இறைவன் தகுதியுள்ளவர்களை அழைத்து பயன்படுத்துவதும் உண்டு, தகுதியற்றவர்களை பயன்படுத்தி தகுதிப்படுத்துவதும் உண்டு. ஆனால் நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான், அழைப்புக்குத் தகுதியானவர்களாய் நம்மை மாற்றிக் கொள்வது. அதற்கு என்ன செய்யவேண்டும் ?

### 1. மீட்பை அறிதல்

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையான மீட்பைப் பற்றி இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இயேசு நமக்காக பிறந்தார், மரித்தார், உயிர்த்தார், வருவார் எனும் அடிப்படைப் பாலபாடமான உண்மையைப் புரிந்து கொள்வது முக்கியமான தேவை. அதுவே நம்மை இறைவனின் சீடர்களாக மாற்றும். அதுவே நமது வாழ்க்கையை இறைவனுக்கான வாழ்க்கையாய் மாற்ற உதவும். மீட்பரை அறிந்து கொண்டு, மீட்பை அறிந்து கொண்டு, பாவங்களுக்கான மன்னிப்பு வேண்டும் முதல் சுவடுடன் பயணம் ஆரம்பிக்க வேண்டும்.

### 2. தூய்மை அணிதல்

"தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்'ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" என்கிறார் இயேசு (மத் 5:8) . இறைவனைக் காண்பதற்கு தூய்மையான வாழ்க்கை அவசியம். தூய்மையான வாழ்க்கை என்பது வெளிவேடமான வாழ்க்கையல்ல. அது உள்ளார்ந்த மாற்றத்துக்கான வாழ்க்கை. பாவங்களை படிப்படியாக விலக்கி, புனிதத்தை தொடர்ந்து நெருங்கும் வாழ்க்கை. அதை அணிந்து கொள்ள வேண்டும்.

"எனவே நீ இள வயதின் இச்சைகளை விட்டு ஓடிவிடு. தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவரது பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன் நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடித் தேடு ( 2 திமோ 2 : 22 ) எனும் விவிலிய வசனத்தை இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

### 3. இயேசுவை அறிவித்தல்

நற்செய்தி அறிவிக்கும் பணியில் நம்மை இணைத்துக் கொள்வது இறைவனின் விருப்பங்களில் ஒன்று. உலகெங்கும் நற்செய்தியை அறிவிப்பது இறைவனின் கட்டளைகளில் ஒன்று. ஆனால் அது வெறும் வார்த்தை சார்ந்த அறிவிப்பாய் இல்லாமல் நமது வாழ்க்கை சார்ந்த அறிவிப்பாய் இருக்க வேண்டும். "உங்கள் கனிகளைக் கொண்டே நீங்கள் என் சீடர்கள் என மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்" என்றார் இயேசு. அத்தகைய ஒரு இறைவார்த்தை அறிவித்தலை நாம் செயல்படுத்த வேண்டும். 'சிறுபிள்ளை நான்' என்று சொல்லாதே, யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல், எவற்றை

எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல்" என கடவுள் எரேமியாவுக்கு ( 1:7) உரைத்த வார்த்தைகளைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

### 4. வார்த்தையை நேசித்தல்

இறைவன் அன்பாய் இருக்கிறார். இறைவன் வழிகாட்டியாய் இருக்கிறார். இறைவன் நம்மோடு இருக்கிறார். இறைவன் மீட்பின் கரமாய் இருக்கிறார். இப்படி இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள நமக்கு இருக்கின்ற நேரடித் தொடர்பு இறைவார்த்தைகள்தான். இறைவார்த்தையை நேசித்து வாசிப்பது இறைவனின் அன்பைப் புரிந்து கொள்வதன் அடிப்படைத்தேவை.

இறைவார்த்தைகளை ஏனோ தானோவென வாசிப்பதில் இறைச் சித்தம் வெளிப்படுவதில்லை, தூய ஆவியின் துணையோடு ஆழமாய் வாசிப்பதே மிகப்பெரிய பயன்களைக் கொடுக்கும். அத்தகைய தேடலோடு வார்த்தையை வாசிக்க வேண்டும்.

### 5. மனிதம் காத்தல்

கிறிஸ்தவன் அன்பின் அனலாய் இருக்க வேண்டும். எனது ஒளியை நீங்கள் பிரதிபலிக்க வேண்டும் என்றார் இயேசு. இயேசுவின் ஒளி நமக்குள் இருந்தால் நாம் பிரதிபலிப்பதும் தூய ஒளியாகவே இருக்கும். ஒளியைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக நாம் இருக்க வேண்டும். அதற்கு சக மனிதர் மீது இயேசு காட்டியதைப் போன்ற அன்பைக் காட்ட வேண்டும். எதிரிக்கும் அன்பைப்பகிரும் இறைவனின் இதயத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

### 6. வழியைக் காட்டல்

"நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு ( 1 திமோ 4:12 ) என்கிறது பைபிள். இளைஞனின் பணி பிறருக்கு முன்மாதிரியாய் இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவ போதனை. அதற்கு கடைப்பிடிக்க வேண்டியவைகளாக பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை மற்றும் தூய்மை ஆகியவற்றை விவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. இவற்றை உறுதியாய்ப் பற்றிக் கொள்வோம்.

### 7. செபத்தில் நிலைத்தல்

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான ஒரே பாலம் செபம். இயேசு மனிதனாய் வாழ்ந்தபோது செபித்தார். செபம் எவ்வளவு வலிமையானது என்பதைப் போதித்தார். “விழித்திருந்து செபிக்க முடியாதா” என கேட்டார். செபத்தை விட்டுவிடக் கூடாது என்பதை தன் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார்.

செபத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும். நமது உரையாடலை இறைவனிடம் சமர்ப்பிக்க மட்டுமல்ல, இறைவனின் பதிலை இதயத்தால் கேட்டு உணரவும் செபம் மிக முக்கியம்.

இந்த சிந்தனைகளை மனதில் கொள்வோம். இளையோரைத் தேடும் இறைவனை,இளையோர் கண்டடையட்டும்.



# ஆண்டவரின் விண்ணேற்பு

## இயேசுவின் விண்ணகப் பயணம்

## சீடர்களின் நற்செய்தி

### அறிவிப்பு பயணம்

அருட்பணி. முனைவர். அந்தோணி ஜோசப்
செங்கல்பட்டு மறைமாவட்டம்

இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வில் நமது விண்ணகப் பயணத்தின் பாதைகள் வெளிப்படுகின்றது. "விண்ணகத்தினின்று இறங்கி வந்த இயேசுவைத் தவிர வேறு எவரும் இதுவரை விண்ணகத்திற்கு எவரும் ஏறிச் சென்றதில்லை. இயேசுவின் விண்ணேற்பு அடைந்த இந்நாளில் நமது உள்ளமும் விண்ணகம் நோக்கி உயர வேண்டும்" புனித அகுஸ்தினார். தொடக்கக் கால கிறித்தவர்களுக்கு இயேசுவின் விண்ணேற்பு மிகப் பெரும் எதிர்கால நம்பிக்கையை வழங்கியது. தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் விண்ணேற்றபின் மூலம் தாங்களும் பின்னொருநாளில் இயேசுவில் உயிர்ப்போம் என்னும் உத்தரவாதத்தை வழங்கியது. இயேசுவின் வழிமுறைகளைப் பின்பற்றி அன்பின் மார்க்கத்தை பின்பற்றி வாழ்ந்தால் நம் அனைவருக்கும் இவ்விண்ணக மகிமை கிடைக்கும் என்னும் நம்பிக்கை இவ்விழாவின் மூலம் நமக்கு வழங்கப்படுகின்றது.

### இயேசுவின் விண்ணேற்பு நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது

நமது இயேசுவின் விண்ணேற்பின் பொழுது சீடர்களுக்கு வழங்கப்பட்ட உறுதியும். நம்பிக்கையும், ஆற்றலும் அவர்களின் அச்சத்தைப் போக்கி மகிழ்ச்சியை வழங்கியது. தூய ஆவியின் வருகையினால் அவர்களின் உள்ளம். சிறைவாசத்திற்கும். ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும். பசிக்கும், நெருப்பிற்கும். கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்கும் அஞ்சாமல் துணிவோடு கிறிஸ்துவை அறிவிப்பதற்கு தயாரானது.

### இயேசுவின் விண்ணேற்பு – விண்ணகப் புறப்பாடு விண்ணகப் பயணம்

இயேசு தனது உயிர்ப்பிற்குப் பிறகு நாற்பது நாட்கள் சீடர்களோடு உரையாடி, அவர்களை உறுதிப்படுத்தி இறையாட்சியைப் பற்றி கற்பித்து நம்பிக்கையூட்டி தூய ஆவியாரின் வருகையைப் பற்றி எடுத்துரைத்து அவர்கள் யூதேயா சமாரியா பகுதிகளில் சாட்சியாய் செயல்பட இருப்பதை முன்கூட்டியே அறிவித்து அவர்கள் கண்கள் முன்பாக விண்ணகம் சென்றதை இன்றைய முதல்வாசகம் திருத்தூதர் பணியிலிருந்து (திபணி 11 –11) எடுத்துரைக்கின்றது. இயேசுவின் விண்ணேற்பு பயணத்திற்கு முன்பாக தனது இறையாட்சி பயணத்தின் குறுத்தடியை (Balon) தனது சீடர்களுக்கு அறிவுரையாக வழித்தடமாக வழங்குகின்றார். இயேசுவின் விண்ணகப் பயணத்திற்குப் பிறகு சீடர்களின் பயணம் துவங்குகின்றது.

### சீடர்களின் புறப்பாடு சீடர்களின் இறையாட்சிப் பயணம்

உலகின் கடையெல்லை வரைச் சென்று நற்செய்தியை அறிவிக்க சீடர்கள் புறப்படுகின்றார்கள். நோயாளியின் மீது கரம் வைத்து செபித்து குணப்படுத்த வாழ்வை வழங்க. மகிழ்ச்சியை மீட்டெடுக்க புறப்பட்டுச் செல்கின்றார்கள். உலகில் உள்ள அனைவருக்கும் வாழ்வை வழங்கிட மகிழ்ச்சியை பகிர்ந்திட புறப்பட்டுச் செல்லுங்கள் என இயேசுவின் இறுதி வார்த்தையில் இறையாட்சிக்காக அவரின் தாகமும் வேட்கையும் வெளிப்படுகின்றது. வாழ்வை எல்லா உயிரினங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்வதே இறையாட்சியின் முதன்மையான நோக்கம். குறைபாடுள்ள மனிதர்களைத் தான் இயேசு இறையாட்சிப் பணிக்காக அனுப்புகின்றார். அவர்களின் நம்பிக்கையும் ஆற்றலும் குறைவுபட்டிருந்தாலும் இயேசுவின் நம்பிக்கை மிகுந்த வார்த்தைகளை ஏற்று, புதிய ஆற்றல் ஊட்டப்பெற்றவர்களாய் சீடர்கள் செல்கின்றார்கள்.

### இறையாட்சியை அறிவியுங்கள்

நம் அனைவருக்கும் சீடர்களுக்கு வழங்கப்பட்ட அதே பணிப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. நற்செய்தியை அறிவியுங்கள். மக்களை ஒன்று சேர்த்து அவர்களை அதிகாரத்திற்கு உட்படுத்தி. நீங்கள் முக்கிய பதவிகளை பற்றிக்கொண்டு நற்செய்தியை அறிவியுங்கள் என்று இயேசு கூறவில்லை. மாறாக நற்செய்தி அறிவிப்பதன் மூலம் வாழ்வை வழங்குங்கள் என்று கூறுகின்றார்.

### இயேசுவின் பேராற்றல் சீடர்களிடத்தில் செயல்படாது (Inergy of Jesus)

இன்றைய நற்செய்தியின் வரிகளில் ஆண்டவரும் அவர்களோடு இருந்து அவர்களை உறுதிப்படுத்தினார் என குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் பேராற்றல் சீடர்களின் ஆற்றலோடு இணைந்து (Synergy) குணப்படுத்தும் பணியில், அரும் அடையாளங்கள் நிகழ்த்துவதில் சீடர்களின் வார்த்தைகளை உறுதிப்படுத்தியதாக நற்செய்தி கூறுகின்றது. கிறிஸ்துவ வாழ்வின் Synergy. கிறிஸ்தவ வாழ்வு தனிப்பட்ட நபரின் ஆற்றலினால் செயல்படுவது அல்ல. தனி நபரின் ஆற்றலால் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. மாறாக என் வலிமையின் வல்லமையாக இயேசு ஆற்றல் இணைகின்றபொழுது அரும் அடையாளங்கள் அங்கே நிறைவேறுகின்றது. நம்பிக்கையாளரின் உள்ளத்தில் இயேசுவின் ஆற்றல் செயல்படுகின்றது. உள்ளத்தை உறுதிப்படுத்துகின்றது.

இயேசுவின் ஆற்றல் செயல்படுவதால் சீடர்களின் ஒவ்வொரு செயலும் நன்மையை விளைவித்து வாழ்வை வழங்கி, போதிக்கும் வார்த்தைகள் கேட்பவர்களின் இதயங்களில் ஆழமாய்வேரூன்றியது. அனைத்தையும் புதியதாய் மாற்றியது. இயேசுவின் வார்த்தைகள் சீடர்களிடத்தில் இல்லையென்றால் அவர்கள் வாய்சொல் போதனை வெறுமையானது எனது கனவுகள், வார்த்தைகள் போதனைகள் விருப்பங்கள், இவையெல்லாம் நற்செய்தியின்படி அமையவில்லையென்றால் அவை அனைத்தும் வெறுமையானனவ என்னிடத்தில் உள்ள அன்பு அன்போடு பொருத்தி ஒன்றிணைந்து கடவுளின் ஆற்றலாக செயல்படவில்லையென்றால் அவ்வன்பு செயலற்ற அன்பாகவே இருக்கும்.

இறைவன் ஆற்றலோடு இணைந்து செயல்படும்பொழுது என்னால் புதிய மொழியை பேச முடியும். மற்றவர்களின் வார்த்தைகளுக்கு செவிமடுத்து இதயம் திறந்த நுண்ணறிவோடு உரையாட முடியும். இவ்வுலகின் மிகச் சிறந்த மொழி என்பது மென்மையான அணுகுமுறையும், பிறரை மதித்து, அக்கறை வெளிப்படுத்துவதே அதுவே உலகின் புதிய மொழி அதுவே அன்பு மொழி அம்மொழியைத் தான் அன்று சீடர்கள் பேசினார்கள். இன்றும் அத்தகைய மொழியைத்தான் நாம் பேசிட இயேசுவின் அழைப்பு நமக்கு வழங்கப்படுகின்றது.



08.06.2025

# பெந்தகோஸ்தே பெருவிழா திருஅவையின் பிறப்பு இயேசுவின் உயிர்மூச்சு

பெந்தகோஸ்தே என்பதன் பொருள் ஐம்பது என்பதாகும். யூத வரலாற்றில் பாஸ்கா விழாவிற்கு பின்வரும் 50 நாட்களுக்கு பிறகு கொண்டாடப்படும் அறுவடையின் விழா நன்றியின் விழாவே பெந்தகோஸ்தே பெருவிழா. வெள்ளப்பெருக்கு முடிவுற்று 50 நாட்களுக்குப் பிறகு இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்து கொண்டாடிய விழாவையும், இறைவன் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து மீட்டு 50 நாட்களுக்குப் பிறகு தேசத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் சீனாய் மலையில் பத்துக்கட்டளைகளை வழங்கி இஸ்ரயேல் மக்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்து கொண்டாடிய விழா தான் யூத மக்களின் பெந்தக்கோஸ்தே பெருவிழா. தொடக்ககால கிறித்தவர்கள் இப்பின்னணியில் சிந்தித்து இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு (50 நாட்களுக்குப் பின்) இயேசுவின் சீடர்கள் மீது தூய ஆவி இறங்கி வந்து அவர்களை உறுதிப்படுத்திய விழாவைத்தான் புதிய பெந்தகோஸ்தே விழாவாகக் கொண்டாடத் துவங்கினார்கள்.

இயேசுவின் மனுவுடல் பிறப்பினை கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடி மகிழ்கின்றோம். இன்று இயேசுவின் மறையுடல் பிறப்பின் விழா. இன்று இயேசு மிகவும் அன்பு செய்கின்ற திருஅவையின் பிறப்பு விழா.

## திருஅவையின் பிறப்பு விழா

பெந்தகோஸ்தே பெருவிழா பாஸ்கா காலத்தின் நிறைவாக அமைந்துள்ளது. எரியும் பிளவுண்ட நாவின் வடிவில் அன்னை மரியா மீதும், சீடர்கள் மீதும் தூய ஆவி இறங்கி வந்து அவர்களை புதிய வாழ்விற்கு சாட்சிய வாழ்விற்கு உயிரப்பித்த பிறப்பித்த நாள் இன்று. இயேசுவின் பாஸ்கா மறைப்பொருளாகிய பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் அதன் தொடர்ச்சியாக அவரின் விண்ணேற்றம் இவையெல்லாம் தூய ஆவியின் வருகையினால் உச்சத்தை அடைகின்றது. இன்றைய பெந்தகோஸ்தே விழா திருஅவையின் பிறப்பு விழா தொடக்கவிழா என கூறக் காரணம். இன்றுதான் பேதுரு திருஅவையின் தலைவராக மூத்த சகோதரராக அன்று கூடியிருந்த 2000க்கும் அதிகமான யூத மக்களுக்கு போதித்து அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றிய தினம் இன்று நினைவு கூரப்படுகின்றது. 3000, 4000க்கும் அதிகமான மக்கள் அன்றைய தினம் எருசலேமில் கூடிவர் அவர்கள் கொண்டாடிய அறுவடையின் விழாவே இதற்கு காரணமாய் அமைந்தது மக்களின் யூத மத சட்டங்களின்படி எருசலேம் ஆலயத்திலிருந்து 20 மைல்களுக்குள் வாழ்கின்ற ஒவ்வொரு யூதனும் மூன்று விழாக்களுக்கு எருசலேம் ஆலயத்திற்கு வர வேண்டும். அவ்விழாக்களை அங்குதான் கொண்டாட வேண்டும். இந்த விழாவிற்கு வந்திருந்த யூதர்களின்

மத்தியில்தான் பேதுரு போதித்து நம்பிக்கையாளர்களைக் கொண்ட திருச்சபை என்னும் கிறிஸ்துவின் மறையுடல் உருவாகிட அடித்தளமிடுகின்றார். 16 வெவ்வேறு பகுதிகளிலிருந்து யூதர்கள் அன்றைய நாளில் எருசலேமில் இவ்விழாவை சிறப்பிக்க கூடியிருந்தார்கள்.

## பிரிவினைகள் மறைந்து ஒற்றுமை ஊன்றப்பட்ட நாள்

குழப்பங்களையும், வேற்றுமைகளையும், பாகுபாடுகளையும் பிரிவினைகளையும் மாற்றி இயேசுவை மெசியாவாக மீட்பராக ஏற்றுக்கொண்டவர்களை ஒரே தாயின் பிள்ளையென பெந்தேகோஸ்தே விழா பெற்றெடுக்கின்றது. பழைய ஏற்பாட்டில் பாபேல் கோபுரத்தில் ஏற்பட்ட பிரிவினைகள், குழப்பங்கள் தன்னை உயர்த்திப்பிடித்து மற்றவர்களை அமுக்கி அதிகாரப்படுத்தும் மனநிலைகள் முற்றிலும் மாறி தூய ஆவியின் வருகையினால் தொடக்க கால்கிறிஸ்தவர்கள் அனைவரையும் சமமாக ஏற்று மற்றவர்களின் தனித்துவத்தை மதித்து அன்பு செய்து, தொடக்கக்கால சாட்சிய வாழ்வை சிறப்பாக வெளிப்படுத்திய நிகழ்வுகளே பெந்தகோஸ்தே வாழ்வின் மொத்தப் பொருளாய் அமைந்துள்ளது. தூய ஆவியின் வருகைக்குப் பிறகு நம்பிக்கையாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டு கிறிஸ்துவுக்காக துன்பங்களை ஏற்று, உயிரை கையளிக்கவும் துணிவு பெற்றார்கள்.

இயேசுவின் பெயரால் கடவுள் நம் அனைவரையும் சகோதர சகோதரிகளாக ஒன்றிணைக்கின்றார். தூய ஆவி செயல்படும் இடங்களில் வேறுபாடுகள் களையப்படுகின்றது. புனித பவுலடிகளார் கொரிந்து நகர மக்களுக்கு அறிவுறுத்துவது போல நாம் அனைவரும் திருச்சபை என்னும் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்கள் நம் அனைவரின் தனித்துவமும் ஆற்றலும் திறமைகளும், செல்வமும், இத்திருஅவை வாழ்வதற்காக வளர்ச்சி பெறுவதற்காக வழங்கப்பட வேண்டும் என்னிடம் உள்ள கொடைகள் அனைத்தும் தூய ஆவியாரால் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்நாளில் உணர்ந்து கொள்வோம்.

## இயேசுவின் உயிர்மூச்சு என்மீது ஊதப்பட்டுள்ளது

இன்றைய நற்செய்தியின் வரிகளில் மூடிய கதவுகளின் அறையில் பதுங்கியிருந்து பயந்திருந்த சீடர்களின் மத்தியில் இயேசு தோன்றியதன் விளைவாக தூய ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அன்று முதல் அவர்கள் இயேசுவின் ஆவியையும், ஆற்றலையும், மனநிலையையும் நிலைப்பாட்டையும் பெற்றுக்கொண்டு செயல்படத் துவங்குகின்றார்கள். தூய ஆவியின் வருகைக்குப்பிறகு அவர்கள் வாழ்வு பழைய நிலையை முற்றிலும் களைந்து புதிய மனிதர்களாய், புதிய எண்ணங்களை பெற்றவர்களாய் நற்செய்தி அறிவிப்பதற்கு புறப்படுகின்றார்கள். இயேசுவின் உயிரளிக்கும் ஆற்றலும், அன்பும் ஒளியும் ஏழை எளியவர்களை இறையாட்சியின் முதன்மையானவர்களாக கருதும் நிலைப்பாடும் அவர்கள் உள்ளத்தில் ஆழமாய் பதிந்து அவர்களின் அன்றாட வாழ்வில் போதனையில் உரையாடலில் புதுமையில் வெளிப்படுத்தத் துவங்கினார்கள். மாற்றம் அளிக்கும் இத்தூய ஆவியின் இயேசுவின் உயிராற்றலை இன்று நாம் வரவேற்று பெற்றுக்கொள்வோம். மறுஉருவம் பெற்று இறையாட்சிக்கென களம் காண்போம்.

15.06.2025



# மூவொரு இறைவன் பெருவிழா

தந்தை, மகன், தூய ஆவி மூன்று ஆட்களாக இருப்பினும் ஒரே கடவுளாயிருக்கின்றார் என்பது நமது அறிவுக்கும். ஆராய்ச்சிக்கும், ஆய்வுக்கும் எட்டாத ஒரு மறைப்பொருளாகவே இருக்கின்றது. ஆகச் சிறந்த விளக்கம் வழங்கினாலும் இம்மறைப்பொருளை முழுமையாக விளக்கமுடியாது. ஆனால் இந்த தமத்திரித்துவ கடவுளின் செயல்பாடுகள் நம்மை ஒன்றிப்பிலும், ஒற்றுமையிலும், பிறரை மதித்து மாண்போடு உறவாடுவதிலும் ஈர்க்கின்றது. எல்லா அருட்சாதனங்களும், ஆசீர்வாதங்களும், மூவொரு இறைவன் இறைவன் பெயரால் துவங்குகின்றது. நிறைவுபெறுகின்றது. திருப்பலியின் துவக்கமும் முடிவும் மூவொரு இறைவனின் பெயராலே நிறைவேற்றப்படுகின்றது.

## இறைவார்த்தை ஒளியில் மூவொரு –இறைவன்

இவ்வுலகின் இறைச்சாயலின் படைப்பாகிய முதல் பெற்றோர்களை இறைவன் படைத்தபொழுது நமது சாயலாக மனிதனைப் படைப்போம்" என்று கூறியே இறைவன் தனது உயிர்மூச்சை வழங்கி படைக்கின்றார். ஆபிரகாமின் வீட்டை யாவே கடவுள் சந்தித்தபொழுது மூன்று கடவுளின் ஆட்கள் அவரது இல்லத்தின் முன்பாக நிற்பதை ஆபிரகாம் காண்கின்றார் (தொ நூ 18:2). ரஷ்ய கீழைநாட்டு திருச்சபை இந்நிகழ்வுகளை ஆபிரகாமின் மூவொரு இறைவனின் அனுபவம் என்று கொண்டாடுகின்றனர். நற்செய்தியின் பக்கங்களில் இயேசுவின் பிறப்பின் பொழுது அன்னை மரியா மீது தூய ஆவி நிழலிடுவதையும் இயேசு என்னும் இறைமகனை அவள் பெற்றெடுக்க இருப்பதையும் வானதூதர் மரியாவுக்கு அறிவிக்கின்றார். (லூக்கா 1:26–38) இயேசுவின் திருமுழுக்கின்பொழுது மூவொரு இறைவனின் பிரசன்னம் அங்கு நிறைந்திருப்பதை மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார் தூய ஆவியின வருகையும், தன் மகனால் பெற்ற இறைத்தந்தையின் பெருமிதமும் மூவொரு இறைவளின் செயல்பாடுகளுக்கு சான்று பகருகின்றன (மத் 3:16) இயேசு தனது இறுதி இராவுணவிற்கு முன்பாக தாம் இவ்வுலகைவிட்டு செல்ல இருப்பதையும் தன் பர்களைத் தனியாக தவிக்கவிட்டு செல்லவில்லை மாறாக துணையாளரை அனுப்பி அவர்களை உறுதிப்படுத்த இருப்பதாகக் கூறி தூய ஆவியின் வருகையைப் பற்றி சீடர்களுக்கு எடுத்துரைக்கின்றார்

(யோவா 15 அதிகாரம் மற்றும் 18 அதிகாரம்). தனது சீடர்களுக்கு இறையாட்சியின் பணியை ஒப்படைக்கின்றபொழுது மூவொரு இறைவனின் பெயரை உச்சரித்து அவர்களின் ஆசீரோடு சீடர்களை சான்றுபகர இவ்வுலகின் எல்லா பகுதிகளுக்கும் அனுப்புகின்றார் (யோவா 28:18)

## மூவொரு இறைவன் குடும்ப அன்பின் அடையாளம்

தந்தை, மகள், தூய ஆவியானவரின் ஒன்றிப்பும் ஒருவர் மற்றொருவர்மீது கொண்ட மதிப்பும். அன்பும், மகிழ்வும் அக்கறையும். உடனிருப்பும் ஊக்குவித்தலும், பணிப் பகிர்வும் பணித்தெளிவும். ஒருவர் ஒருவர் மற்றவரின் சுமையை தாங்கிக்கொள்ளும் தாராள உள்ளமும் முதிர்ச்சியும், முனைப்பும் இன்றைக்கு எல்லா குடும்பங்களுக்கும் மேல்வரிச் சட்டமாக வழிகாட்டுதலாக அமைகின்றது நம்முடைய கிறிஸ்தவ வாழ்வு மூவொரு இறைவன் குடும்பத்திலிருந்துதான் என்னும் துவங்குகின்றது நாம் மூவொரு இறைவனின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அவர்களின் அன்பையும். உடனிருப்பையும் உணர்பவர்கள். எனவே இத்தகைய அன்பு நிலையும் அக்கறையும் நமது குடும்பங்களில் வெளிப்படுவதே ஆகச் சிறந்த சாட்சிய குடும்பங்களின் வாழ்வு நிலை. இறைவன் தன்னை ஓர் குடும்பமாகவே அடையாளப்படுத்தி வாழ்கின்றார். தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவின் ஆழம், தூய ஆவியாரின் உடனிருப்பு இவையெல்லாம் பெற்றோர் பிள்ளைகள் உடன்பிறந்தோர் மத்தியில் இருக்கவேண்டிய ஆழமாக, புரிதல் மிகுந்த உறவின் அடையாளங்கள். அனைத்தையும் தந்தையின் விருப்பத்தின்படியே நிறைவேற்றும் இறைமகனையும், தன்னிடம் பிறருக்காக வேண்டும் தனது மகனின் செபத்தை நிறைவேற்றும் இறைத்தந்தை தங்களைச் சார்ந்தவர்களைத் திக்கற்றவர்களாக விட்டுவிடாமல் எல்லா நிலைகளிலும் நல்லவற்றை தேர்ந்தெடுத்து அல்லவைகளை அகற்றும் தூய ஆவியார் நல்ல குடும்ப உறவுகளுக்கு ஓர் சிறந்த வழிகாட்டுதலாக அமைகின்றது. நமது குடும்ப உறவுகளையும் குடும்ப சூழ்நிலைகளையும் மிக எளிதாக மூவொரு இறைவனோடு பொருத்திப் பார்த்து நாம் இம்மறைப்பொருளின் தெளிவினைப் பெற முடியும்.

"எல்லா இனத்தாரையும் தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் வரவேற்று திருமுழுக்கு கொடுங்கள்" என இயேசு தனது சீடர்களை அனுப்புகின்றார். இயேசு இறைவனின் முகத்தை இம்மூன்று ஆட்களின் பெயரால் அடையாளப்படுத்துகின்றார்.

மூவொரு இறைவனுக்குள் நிறைந்து கிடந்த அன்பும். குடும்ப உணர்வும், பிணைப்பும், தந்தை மகனுக்கும் உள்ள ஆழமான நட்புணர்வும் வெளிப்படுகின்றது.

தந்தை மகன் என்ற பெயர்கள் ஒருவரின்றி மற்றவருக்கு கிடைத்திடாது. தந்தையின்றி மகன் இல்லை மகனின்றி தந்தையில்லை. தூய ஆவியின் பெயரை சொன்னாலே அங்கு உயிர் மூச்சும் வாழ்வும் நிறைந்திருக்கும்.

தந்தை மகன் தூய ஆவி இவர்கள் தனியாக இல்லை, கூட்டுக் குடும்பமாக செயல்படுகின்றனர். இவர்கள் தனிக்குடித்தனம் நடத்துவதில்லை அவர்களின் மத்தியில் இயக்கமாய் செயல்படுவது அன்பு மட்டுமே. மூவொரு இறைவன் நமது குடும்ப உறவுகளிலும் அன்பின் இயக்கமாய் செயல்பட வேண்டுவோம்.



22.06.2025

# கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல் திருஇரத்தப் பெருவிழா

இன்றைய வாசகங்கள் அனைத்தும் இறைவனோடு நமக்கும் உள்ள உடன்படிக்கையை ஒன்றிப்பை இணைப்பிரியா உறவினை எடுத்தியம்புகின்றது. உடன்படிக்கையின் மூலமாக இறைவன் நமக்கும் அவருக்கும் இடையே உள்ள பாசப்பிணைப்பை அவரின் அன்பின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றார். நற்கருணை என்னும் அருட்சாதனத்தின் மூலமாக இறைவன் நம்மைத் தேடி வருகின்றார். நம்மிடத்தில் அவரது கூடாரத்தை அமைத்து தங்குகின்றார். தனது திருஇரத்தத்தின் வழியாக உடன்படிக்கையின் புரிந்துணர்வை உருவாக்கி தமது எல்லாச் சூழலிலும், ஏற்றத்திலும், இறக்கத்திலும், வெற்றியிலும், தோல்வியிலும், மகிழ்விலும், துன்பத்திலும் நம்மோடு தங்கி உறுதிப்படுத்தலே இயேசு புதிய பாஸ்காவும், புதிய உடன்படிக்கையின் அடையாளமான அவரது திருவுடலையும் திருஇரத்தத்தையும் நமக்கு வழங்குகின்றார்.

### புதிய மாற்றம் புதிய மனநிலை

இயேசு இறுதி இராவுணவினை தன் சீடர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது மிகுந்த சோகத்துடனும் வருத்தத்துடனும் அதனை நடத்தவில்லை. சீடர்கள் உள்ளத்தில் வேதனையும், கலக்கமும் நிறைந்திருந்தாலும், இயேசு அவர்களின் மனநிலையை, சோகம் நிறைந்த சூழலை ஓர் கொண்டாட்டமாக மாற்றுகின்றார். இறுதி இராவுணவின் சூழலில் இறைவன் அவர்களின் வாழ்வினை மாற்ற வழிநடத்த மிகப்பெரும் சட்டத்திட்டங்களை வழங்கவில்லை. மாறாக மனிதர்களை மாற்றுவதற்காக தமது உடலையும் இரத்தத்தையும் வழங்குகின்றார்.

### இது எனது உடல் இது எனது இரத்தம்

இது எனது உடல் எனக் கூறி அப்பத்தைப் பிட்டு தனது சீடர்களுக்கு இயேசு வழங்குகின்றார். நாம் எதிர்பார்த்தது போன்று, இதுவே எனது அறிவு இதுவே எனது ஆன்மா. இதுவே எனது விருப்பம். இதுவே எனது இறைத்தன்மை இதுவே எனது ஞானம் இதுவே எனது செயல்பாட்டின் யுக்தி என இயேசு கூறவில்லை. ஆனால் இயேசு இதுவே எனது உடல் என குறிப்பிடுகின்றார். இதுவே எனது உடல் என இயேசு கூறி இறுதி இராவுணவின் போது அப்பத்தை வழங்கிய பொழுது இயேசுவின் ஒட்டுமொத்த வாழ்வும் அதில் உள்ளடங்கியுள்ளது. தச்சராக அவர் உழைத்த கரங்கள், பிறரை சந்திக்க பயணப்பட்ட கால்கள், இரக்கம் நிறைந்த கண்கள், நண்பர்களையும் கைவிடப்பட்டவர்களையும் வரவேற்று அரவணைத்த மனநிலை, நோயாளிகளையும், ஏழைகளையும் புறம்பே தள்ளப்பட்டவர்களையும் ஏற்று தொட்டு, உடல் நலனையும் உடனிருப்பையும் வெளிப்படுத்திய தோழமை இவையெல்லாம் இயேசுவின் உடலோடும் இரத்த நாளங்களோடும் பின்னிப் பிணைந்து இருப்பவை. எனவேதான் சீடர்களுக்கு

எளிமையின் தோழமையின் உடனிருப்பின் மனித பலவீனத்தின் அடையாளமாக ஒட்டுமொத்த உருவமாக இருக்கின்ற அவரது உடலேயே தனது சீடர்களுக்கு இறுதி இராவுணவின் போது வழங்குகின்றார். தனது உடலோடும். இரத்தத்தோடும் கலந்திருந்த இறைவனின் இரக்கத்தையும், அன்பையும் இறையாட்சியின் மதிப்பீடுகளையும் இதன் வழியாக வழங்குகின்றார்.

## இறைவாழ்விற்கான சூட்சமம் நற்கருணை

"நானும் எனது சகோதர சகோதரிகளும் நிறைவாழ்வைப் பெறுவதற்கு இயேசுவின் உடலும் இரத்தமும் எனக்கு உதவுகின்றது. நான் நிறைவாழ்வைப் பெற. உன்னை பரிகாரப் பலியாக ஒப்புக்கொடு," என இயேசு கூறவில்லை மாறாக இயேசு தன்னை உடைத்துக் கொடுக்கின்றார். புனித பொன்வாய் யோவான் நற்கருணையை நிறைவாழ்வின் முடிவில்லா வாழ்வின் மருந்து என குறிப்பிடுகின்றார். (Eucharist is the medicine of eternity). நானும் எனது சகோதர சகோதரிகளும் வாழ்வைக் கண்டடைய நற்கருணை நமக்கு பேருதவியாக இருக்கின்றது.

வாழ்வை பெற்றுக்கொள்ள நீ எனது ஞானத்தைப் பெற்றுக்கொள் எனது புனிதத்தை ஏற்றுக்கொள்.எனது வெகுளியான உள்ளத்தை பின்பற்று என இயேசு கூறவில்லை. மாறாக நாம் வாழ்வு பெறுவதற்கு எனது சதையை உண்ணுங்கள் எனது இரத்தத்தைக் குடியுங்கள் என யோவான் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார் (யோவான் 6:5158) இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் நமக்கு கொடையாக தானே விரும்பி வழங்குகின்றார். இயேசுவின் உடலில் நமது கரங்களில் இறைவனின் மிகப்பெரும் பரிசாக உடனிருப்பாக வழங்கப்படுகின்றது. நமக்கு இயேசுவின் உடல் எனது நாவில் அப்பமாக, எனது உடலின் நாளத்தில் இரத்தமாக எனது உடலின் உயிர் செல்லாக, எனது எண்ணமாக என் வாழ்வை இயக்குகின்ற சிந்தனையாக, எனக்கு வாழ்வை சுமந்து வருகின்ற ஆக்சிஜனாக இயேசு வர விரும்புகின்றார். இயேசு எனது இரத்த நாளத்திற்குள் நுழைந்து எனது இதயத்தில் வேரூன்றி என்னை செயல்படும் கிறிஸ்தவனாக மாற்றிட உடலாகவும், இரத்தமாகவும் என்னிடத்தில் வருகின்றார். இயேசு மனுவுடல் ஏற்றதன் மூலமாக கடவுள் மனிதரானார். இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் நமக்கு வழங்குவதன் வழியாக நாம் அனைவரும் நமது எண்ணங்களில் அன்பு செயல்களில், சமூக அக்கறையில், அடுத்தவர் நலனில் கடவுளின் மகளாக, மகனாக செயல்படவே இவ்வாறு செய்தார்.

நற்கருணையை வெறும் ஆராதனைக்குரிய மறைப்பொருளாக மட்டும் கருதி நம் கிறிஸ்தவ வாழ்வினை நகர்த்திட முடியாது. நற்கருணை நமது ஆன்மிக வாழ்வையும் அன்றாட செயல்பாடுகளையும். மதிப்பீடுகளையும் சரிபார்க்கும் அளவுகோல், வாழ்க்கையில் இன்பம் காண விருப்பமா? வாழ்வின் வளத்தை துய்க்குமாறு நெடுநாள் வாழ நாட்டமா?(திபா 34:12). நற்கருணை நமக்கு வாழ்வை வழங்குகின்றது. ஏனெனில்

இரத்தம்தான் ஒருவரின் உயிர் நாடி, இரத்தத்தில்தான் ஒருவரின் உயிர் உள்ளது. (லேவி 17:11) இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் நான் பெறுகின்றபொழுது இயேசுவின் உயிர் என்னுள் நுழைந்து, இயேசுவின் வாழ்வு என்னை நிறைவடையச் செய்கின்றது. ஒரே இறைபந்தியில் நற்கருணையை பெறுவதன் முலம் நாம் அனைவரும் அன்பையும், சமத்துவத்தையும். நட்பையும் மனித மாண்பையும், கொண்ட நற்கருணையை, சமூகத்தை உருவாக்க வேண்டும். கொரி 11:173)



# நம்முடன் தூய ஆவியார் –13

## தூய ஆவியாரும் புனிதர்களும்

ரோனா ஆல்பர்ட்

உலக மீட்பின் பொருட்டு இறைவன் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார் (கலா 5:45). இறைவனின் மகன் 'மானிடரான நமக்காகவும், நம் மீட்புக்காகவும் வானகம் இருந்து இறங்கினார்' தூய ஆவியினால் கன்னி மரியிடம் உடல் எடுத்து மனிதன் ஆனார்' என்று நாம் விசுவசிக்கிறோம்.

அன்னை மரியா இறைத்தந்தையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இயேசுவை ஈன்றெடுத்த அன்னை. திரித்துவத்தில் மரியன்னை கொண்டிருக்கும் நெருங்கிய உறவால் அவர் எல்லா புனிதர்களுக்கும் மேலாக வணக்கம் பெறுகிறார். ஏவாளால் சாவும், மரியாவால் வாழ்வும் வந்தது என திருச்சபை நமக்குக் கற்பிக்கிறது. அவர் இயேசுவைப் பெற்றதால் புனித இரேனேயுஸ் கூறுவதுபோல மரியா தன் கீழ்ப்படிதலால் மனுக்குலம் அனைத்தும் மீட்பு பெறக் காரணமானார். நாம் அன்னை மரியாவிடம் வேண்டுவதைப்போலவே, அவரும் சீடர்களுடன் இணைந்து இயேசுவின் கட்டளைப்படி (தி.ப.1:45) ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார் (தி.ப.113:14). பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்டு (தி.ப.2:4) வேற்று மொழிகளில் ஆண்டவரைப் போற்றித் துதித்தார். தூய ஆவியாரால் கருவுற்றபோதே, அன்னை மரியா தூய ஆவியாரின் பேராலயம் ஆனார் (லூக்கா 1:31 32). பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரின் பிரசன்னத்தால் திடப்படுத்தப்படுகிறார்.

புனிதர்கள் அனைவருமே தூய ஆவியால் நிரப்பப்பட்டு மறுபிறப்புப் பெற்றவர்கள். “ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்” (யோவான் 3:56) என இயேசு, நிக்கதேமுக்கு உரைக்கிறார். எனவே, நாம் அனைவரும் தண்ணீரால் திருமுழுக்குப் பெற்றால் போதாது, தூய ஆவியால் திருமுழுக்குப் பெற வேண்டும். ஏனெனில், கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள், அவர்களே கடவுளின் பிள்ளைகள் (உரோ 8:14,16) என்று தூய ஆவியாரும் சான்று பகர்கிறார்.

இவ்விதம் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட புனிதர்கள் அனைவருமே நாம் இயேசுவின் வழியில் நடக்க நமக்கு வழிகாட்டிகளாக அமைந்தவர்கள். அவர்கள் நம்மை புனிதப்படுத்துவதில்லை, நம்மை மீட்பதில்லை, நம்மை விண்ணகத்தில் சேர்ப்பதுமில்லை. ஆனால் நமக்கு முன்மாதிரிகையாக விளங்கி வாழ்வும் வழியுமான இயேசுவைப் பின்பற்றி நடக்க நமக்கு புனிதப் பாதையைக் காட்டுபவர்கள். புனிதர்கள் நமக்காகப் பரிந்து பேசி, தந்தையிடம் செபிப்பவர்கள். அதுவும் இயேசுவோடு ஒன்றித்து நமக்காக பரிந்து பேசுபவர்கள்.

புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலில் "எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர்" (உரோ 3:2324) என்று எழுதுகிறார். ஆம், இது அவருக்கே நேர்ந்த சொந்த அனுபவம். துவக்கத்தில் சவுல் என்னும் பெயர் கொண்ட அவர், திருச்சபையை அழிக்கும்படிக்கு கிறிஸ்தவ நெறியைச் சார்ந்த ஆண்களையும் பெண்களையும் வீடு வீடாய் நுழைந்து இழுத்துக் கொண்டுபோய், அவர்களை சிறையிலடைக்கச் செய்தார். (தி.ப.8:3). சாகும்வரை அவர்களை துன்புறுத்திய அவர்தான் பிறகு பவுலாக மாறி யூதேயா, கலிலேயா, சமாரியா பகுதிகளில் தூய ஆவியின் துணையோடு திருச்சபை வளர்ச்சி பெறக் காரணமானார்.

இயேசுவை மூன்று முறை மறுதலித்த பேதுருதான் மனம் மாறி, இயேசுவுக்குப்பின் திருச்சபைக்கு தலைவராக ஆனதோடு, இயேசுவுக்காய் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு உயிர் கொடுத்தார்.

ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதல மரியாதான் தன் பாவ வழிகளை விட்டுவிட்டு இயேசுவின் சீடராகி (லூக் 8:2) உயிர்த்த இயேசுவை முதன்முதலில் கண்டு தலைசிறந்த நற்செய்தி தூதுவரானார்.

இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வன் மனமாற்றம் பெற்று இயேசுவோடு பேரின்ப வீட்டில் முதன்முதலில் நுழைந்தான் (லூக். 23:43).

உண்மையில் மனமாற்றம் என்பது தூய ஆவியாரின் செயல். தூய ஆவியாரின் அருளின்றி எவருமே மனமாற்றம் அடைய முடியாது. புனித அகுஸ்தீன், புனித பிரான்சிஸ் அசிசி, புனித பெரிய தெரேசா, புனித பிரான்சிஸ் சவேரியார், புனித இஞ்ஞாசியார் ஆகியோர் தம் பாவ வழிகளை விட்டு மனமாற்றம் பெற்றே புனிதர்கள் ஆனார்கள்.

'உம்முடைய அழியா ஆவி எல்லாவற்றிலும் உள்ளது. ஆகையால், தவறு செய்பவர்களைச் சிறிது சிறிதாக திருத்துகின்றீர்' அவர்கள் எவற்றால் பாவம் செய்கிறார்களோ, அவற்றை நினைவுபடுத்தி அவர்களை எச்சரிக்கின்றீர்' ஆண்டவரே, அவர்கள் தீமையிலிருந்து விடுபடவும் உம்மேல் நம்பிக்கை கொள்ளவுமே இவ்வாறு செய்கின்றீர்". (சாஞா 12:1)

### தூய ஆவியாரைப் பற்றிய புனிதர் சிலரின் அனுபவங்கள்:

#### புனித அகுஸ்தினார்

"ஓ தூய ஆவியாரே! முழுமையாக என்னுள்ளத்தில் இறங்கி வாரும். புறக்கணிக்கப்பட்ட என் இதயத்தின் இருண்ட மூலைகளில் உம் அறிவொளியைப் பாய்ச்சி மகிழ்ச்சிமிக்க உம் இருப்பிடமாக என் இதயத்தை மாற்றியருளும்"

#### புனித லூசியா

"எவருடைய இதயங்கள் தூய்மையானவையோ, அவை தூய ஆவியாரின் ஆலயங்களாகத் திகழ்கின்றன".

**புனித சிரில்**

“தூய ஆவியார் நம்மில் கடவுளின் சாயலைப் பதிய வைக்கிறார். நம்மை சொல்லற்கரிய அழகினால் நிரப்பி தமது ஆலயமாகத் தேர்ந்து கொள்கிறார். எனவே, நாம் கடவுளர் எனப்படுகிறோம். தூய ஆவியாரின் செயலால் நாம் கடவுளோடு இணைக்கப்பட்டு அறிவுக்கெட்டாத இறைச்சாயலைத் தாங்குகிறோம். அவர் நமக்கு ஒளியைத் தருவது மட்டுமன்றி, அவர் நம்மிலே வாழ்கிறார். ஆகவே மனிதன் உடல், ஆன்மா, தூய ஆவியைக் கொண்டுள்ளான்"

**புனித பேசில்**

"தூய ஆவியாரால் ஒவ்வொரு புனிதரும் இறைத்தன்மையில் பங்கு பெறுகின்றனர். கடவுளே கூறுவதுபோல் நீங்கள் கடவுள் என்று நான் கூறுகிறேன்"

**புனித கொர்னேலியுஸ் தே வாப்பிதே**

“ஆன்மா நம் வாழ்வில் புகும்போது புதுவாழ்வு வருவதுபோல், தூய ஆவியார் நம் ஆன்மாவில் நுழையும்போது, அவர் நமக்கு புதுவாழ்வை, தம் வாழ்வை அளித்து நம்மைப் புனிதமாக்குகிறார்"

**புனித ஆஞ்சலா**

இப்புனிதரிடம் தூய ஆவியார் கூறியதாவது “நான்தான் தூய ஆவியார். நான் உன்னிடம் வந்து உனக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தருவேன். நான் என்றும் உன்னோடு இருப்பேன். உன்னை விட்டுப் பிரியமாட்டேன். ஏனெனில் நீ என் அன்பு மணவாட்டி”

**புனித பிலிப்பு நேரி**

இவர் திருப்பலி நிறைவேற்றுகையில், திவ்விய நற்கருணை வழங்கும்போது தூய ஆவியால் நிரப்பப்படுவார். தூய ஆவியாரின் எல்லையில்லா மகிழ்ச்சியில் பங்கெடுத்தவராய் “ஆண்டவரே, இந்தப் பேரின்பத்தை என்னால் தாங்க முடியவில்லையே. தயைகூர்ந்து இந்த மட்டற்ற மகிழ்ச்சியை நிறுத்திக் கொள்ளும். இல்லாவிடில் மகிழ்ச்சியால் நான் செத்து மடிவேன்” என்று கூறுவார்.

**புனித ஜான் மரிய வியான்னி**

"தூய ஆவியாரின் அனுபவம் பெற்றவர்கள் எல்லையில்லா மகிழ்ச்சியை அடைவார்கள். தூய ஆவியார் நம்மை ஒரு தாயைப்போல வழி நடத்துபவர். அவரை நேசிப்பவர்கள் தனி செபத்தில் பேரின்பம் அடைவர். செபம் செய்ய அவர்களுக்கு நேரமே போதாமல் போகும்"

**புனித சியன்னா கத்தரீனா**

"இறைவனின் பேரிரக்கத்தில் உங்கள் ஆன்மாவை வளப்படுத்திக் கொள்ளுங்கள். தந்தையே திருப்பலிபீட மேசையாகவும், அதில் மகன் திருவுணவாகவும் இருக்க, தூய ஆவியார் உங்களில் காத்திருந்து உங்கள் இதயங்களை அவர்தம் வசிப்பிடமாக மாற்றுகிறார்”.

**புனித குழந்தை தெரேசா**

"விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவன் தங்கியுள்ள நம் ஆன்மா ஒரு சிறு விண்ணகம். எண்ணிலடங்கா உலகங்கள் அவர் அழகை வெளிப்படுத்த முடியாது என்றாலும், அவர் இந்த சிறிய ஆன்மாவில் தம்மையே மறைத்துக் கொண்டுள்ளார்"

**புனித அம்புரோஸ்**

"ஞானம், புத்தி, அறிவு, பக்தி, தெய்வபயம் ஆகியவற்றை ஆன்மிக முத்திரைகளாகப் பெற்றிருக்கும் நீங்கள் அவற்றை பத்திரப்படுத்துங்கள். ஏனெனில் தந்தையாம் இறைவனே அவற்றை முத்திரையிடவும், மகனாகிய கிறிஸ்து வலிமைப்படுத்தவும் செய்து உங்கள் இதயங்களில் ஆவியைப் பொழிந்து நீங்கள் பெற்றுக் கொள்பவற்றில் உங்களை உறுதிப்படுத்துகின்றனர்"

**புனித எப்ராயிம்**

"நல்லொழுக்க குணங்கள் செபத்தாலேயே அமைகின்றன. செபம் நிதானத்தைப் பாதுகாக்கிறது. செபம் சினத்தை அடக்குகிறது. தற்பெருமை, பொறாமை போன்ற பொல்லாத உணர்ச்சிகளை செபம் தடுக்கிறது. செபம், நம் ஆன்மாவில் தூய ஆவியை ஈர்த்து, நம்மில் விண்ணகப்பேற்றுக்கான தகுதியை உயர்த்துகிறது"

**புனித ஜான் கிறிசோஸ்தம்**

"விசுவாசத்தோடு அணுகினால், நாமும்கூட இயேசுவைக் காண முடியும். திருப்பலிபீட மேசையில் வைக்கப்பட்டிருக்கும் திவ்விய நற்கருணையில் இயேசு துணியில் சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கவில்லை, மாறாக தூய ஆவியாரின் ஒளிக் கதிர்களால் பொதியப்பட்டுள்ளார்"

**புனித பீட்டர் தமியான்**

"தூய ஆவியார் நம் மனங்களில் ஒளியை ஊற்றுகிறார். நம்மில் எழும் விருப்பங்களுக்கு வலிமையைத் தருகிறார். உடலுக்கு வாழ்வு தருவது ஆன்மாதான் என்றால், அந்த ஆன்மாக்களுக்கு வாழ்வாக தூய ஆவியார் விளங்குகிறார்"

**புனித லிபியான் தலாசியோஸ்**

"உணர்ச்சிகளால் புத்தி மழுங்கடிக்கப்பட்டாலும், காலத்தால் உருவாகும் புதிர்களை விளங்கிக் கொள்ள தூய ஆவியார் நம் புத்திக்கு தூண்டுகோலாக செயலாற்றுகிறார்"

**புனித சிலுவை அருளப்பர்**

வாழ்வின் மூலங்களாக தூய ஆவியார் வழங்கும் பரிசுத்தத்திலும், தூய்மையான அன்பிலும் ஆட்கொள்ளப்படாவிட்டால் இயேசுவை நம்மால் அன்பு செய்ய முடியாது. "என்னில் நம்பிக்கை கொள்வோர் உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்' (யோவான் 7:3738) என்று நம் தெய்வீக மீட்பர் கூறுவதுபோல், அவரில் நம்பிக்கை கொள்வோர் தூய ஆவியைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவரின்

தெய்வீக அன்பு, பரிசுத்தம், தூய்மை, கறையற்ற தன்மை ஆகியவற்றின் தீப்பிழம்புகளை நமக்குள் மூட்டி தமது எல்லையற்ற நன்மைத்தனத்தால் விண்ணகத் துணையாளரின் மார்பில் ஆழ்ந்த விசுவாச உறக்கம் கொள்ளும் ஒரு குழந்தையைப்போல் நம்மைத் தேற்றிக் காக்கிறார்'

**புனித பாசி மரிய மகதலேனா**

"தூய ஆவியே, உண்மையின் ஆவியே எழுந்தருளி வாரும். நீரே புனிதர்களின் வெகுமதி' நீரே ஆன்மாக்களின் ஆறுதல், இருளில் ஒளி, ஏழைகளின் செல்வம், அன்பர்களின் பொக்கிஷம், பசித்தோருக்கு உணவு, அலைந்து திரிவோரின் அடைக்கலம். நீரே அனைத்து பொக்கிஷங்களையும் ஒருமித்து தன்னகத்தே கொண்டுள்ளவர். நீர் மரியாவின்மீது இறங்கிட, உம் இயல்பாலும், கருணையாலும் வார்த்தை மனுவுருவானதுபோல் எம்மிலும் செயல்பட வாரும். கற்புநிறை சிந்தனையின் காவலும், இரக்கத்தின் ஊற்றும், தூய்மையின் உறைவிடமானவரே! உம்மை அடையத் தடையாய் உள்ளவற்றை நீக்கி என்னில் எழுந்தருளி வாரும்"

புனிதர்கள் தங்கள் வாழ்வில் தோல்விகள், வேதனைகள், தடைகளைக் கண்டாலும். மனம் தளராமல் துணிவோடும், கொள்கைப் பிடிப்போடும் பணியாற்றினர். இதற்கு அடிப்படையாக அமைந்தது அவர்கள் இறைவனோடு கொண்டிருந்த நெருக்கமான உறவுதான். ஆவியின் அருட்கொடைகளைப் பெற்றிருந்த அவர்கள் அவரின் வல்லமையால் வழிநடத்தப்பட்டனர். அதனால் ஆற்றலோடு செயல்பட்டனர். தங்களின் அர்ப்பண வாழ்விற்கு இயேசுவை தலைசிறந்து மாதிரியாகக் கொண்டு, தூய ஆவியின் வல்லமை நிறைந்தவர்களாய் இறையரசை மக்களுக்குப் போதித்தனர், பல வல்ல செயல்களைச் செய்தனர்.

பெரும்பாலான புனிதர்கள் உத்வேகத்தை, அதாவது உள்ளார்ந்த ஆவலையும், உணர்ச்சியையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரை இரண்டுமே ஒன்று என ஏற்கனவே வரையறுக்கப்பட்டதாக இருக்கிறது. உணர்ச்சி எப்போதும் மனிதனுடைய வெளிப்புறத்திலிருந்து வந்தே அவனுள் ஆக்கிரமிக்கிறது. ஆனால் உள்ளார்ந்த ஆவலோ தூய ஆவியிடமிருந்து உருவாகி மனிதனுக்குள் நுழைகிறது. இந்நிலை உருவாக புனிதர்கள் செபத்தின் வழியாக தூய ஆவியாரின் துணையை நாடினார்கள்.

புனிதர்கள் தூய ஆவியாரின் துணையை வேண்டி செபித்ததைப் போலவே, நாமும் செபிக்கும்போது விண்ணக உதவிகளைப் பெற்றுக் கொள்வோம். அவரின் உதவி நாடி வேண்டுகையில் நம் பலவீனங்களுடனே இறைவனின் திருப்பாதத்தை சரணடைவோம். இதன் வழியாய் வெற்றியையும், வலிமையையும் இறையன்பிலிருந்து நாம் பெற்றுக் கொள்ள முடியும். தூய ஆவியாருக்கு நம் தனிப்பட்ட வாழ்வில் இடம் கொடுக்கையில் புனிதப்படுத்தப்படுகிறோம், அவர் வல்லமையை உணர்கிறோம்.



# பதுவை புனித அந்தோணியார்..... (1196 - 1231)

இவர் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1195ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ம் நாள் பிறந்தார். இவரது ஞானஸ்தானப் பெயர் பெர்தினாந்து. தமது 15வது வயதில் இவர் புனித அகுஸ்தின் சபையில் சேர்ந்து திருமுழுக்குப் அங்கிருந்து கோயிம்பரா நகர் மடத்திற்கு இவரை அனுப்பினார்கள்.

கோயிம்பரா மடத்தில் ஒருமுறை பிரான்சிஸ்கன் சபையில் சந்தியாசியாக ஐந்து பேர் ஓர் இரவு புனித அந்தோணியாருடன் தங்கினார்கள். இவர்கள் ஐவரும் வேதம் போதிக்கும்படி மொராக்கோ நாட்டிற்கு சென்று ஆண்டவரை அனைவருக்கும் பறைசாற்றி வேத சாட்சிகளாக உயிர் நீத்தார்கள். இந்த ஐவரின் உடல்களும் ஆரவாரத்துடன் போர்த்துக்கல் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

அந்தோணியாரும் கடவுளுக்காக உயிர்விட ஆசித்து பிரான்சிஸ்கள் சபையில் சேர்ந்து வேதம் போதிக்க ஆப்பிரிக்கா புறப்பட்டார். வழியில் கப்பலுக்கு ஆபத்து ஏற்படவே மீண்டும் ஐரோப்பாவிற்கு திரும்பி பணி மேற்கொண்டார். இவருக்கு தாழ்ந்த வேலைகளே சபையில் கொடுக்கப்பட்டது. ஒருமுறை புதிதாக குருப்பட்டம் பெற்ற ஒருவர் முதல் திருப்பலி நிறைவேற்றுவதற்காக வந்தார். இத்திருப்பலியை சிறப்பிக்க திருச்சபையிலும், நாட்டிலும் உயர்ந்த பதவிகள் வகித்த பலர் வந்திருந்தனர்.

மறையுரை நிகழ்த்த இருந்த குரு ஏதோ ஒரு காரணத்தினால் வரவில்லை. பங்கு குரு கண்கலங்கினார். மறையுரை நிகழ்த்தும்படி பலரைக் கெஞ்சினார் எல்லோருமே பயந்து பின்வாங்கினர். அவர் புனித அந்தோணியாரை நெருங்கி நீர் போய் பரிசுத்த ஆவி உமக்கு சொல்கிறபடி பிரசங்கம் வை என்றார். அந்தோணியாரும் அவருக்கு கீழ்ப்படிந்து எல்லோருமே பிரமித்துப் போகுமளவிற்கு மறையுரை ஆற்றினார். அந்தோணியாரிடமிருந்து தங்களுக்கு பெரும் திரவியம் கிடைத்திருக்கிறது என பிரான்சிஸ்கன் சபை பெரிய குருக்கள் அறிவித்தார்கள்.

குருத்துவ மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க அவரை நியமித்தார்கள். ஏற்றுக்கொண்ட பணியை செய்தாலும், ஊர் ஊராய் போய் மக்களுக்கு கடவுளைப்பற்றி போதித்து அவர்களை கடவுளிடம் கொண்டு வரவேண்டும் என்று விரும்பிய அந்தோணியார் பதவியை விட்டு விலகி பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, நாடுகளுக்கு சென்று ஊர் ஊராயப் பிரசங்கித்து அநேக பாவிகளை மனம் திருப்பினார்.

அந்தோணியார் பணிபுரிந்த ஊரில் திசோ என்னும் நல்ல மனிதர் ஒருவர் இருந்தார். அவர் அந்தோணியாருக்கு ஒரு நல்ல அறையை கொடுத்து தமது இல்லத்திலேயே தங்கும் படி கேட்டுக்கொண்டார். அங்கு அவர் தங்கியிருக்கையில் ஓர் அபூர்வ ஒளியை நள்ளிரவில், திசோ கண்டார். காரணத்தை அறிய விரும்ப சாவித்துவாரத்தின் வழியாக அந்தோணியாரின் அறையை உற்று நோக்கினார். அங்கு அதிசய அழகு குழந்தையொன்று மேஜை மீது திறக்கப்பட்ட புத்தகத்தில் நின்று கொண்டு தன் இரண்டு கரங்களாலும் அந்தோணியாரின் கழுத்தை கட்டிப் பிடித்து முத்தமிட்டு விளையாடிக்கொண்டிருக்கும் காட்சி சாவித்துவாரத்தை சுட்டிக்காட்ட சற்று நேரத்திற்குப் பின் அக்குழந்தை அந்தோணியாரிடம் ஏதோ சொல்லியது, இதைக்கண்ட திசோ அவ்விடத்தைவிட்டு பயந்து ஓடினார். அந்தோணியார் அவரை தடுத்து நிறுத்தி நான் உயிரோடு இருக்கும்வரை இந்நிகழ்ச்சியை யாரிடமும் வெளிப்படுத்தக் கூடாது என வாக்குறுதி வாங்கிக்கொண்டார்.

பல்வேறு அதிசயங்கள், ஆச்சரியங்களை தமது பணிக்காலத்தில் நிகழ்த்திய அந்தோணியார் 13.06.1231ம் ஆண்டில் இறைவனில் இணைந்தார்.

**சிந்தனை :** கடவுளின் நாமம் தேனைவிட நாவுக்கு இனிமையானது. பரவசப்படுத்தும் பாட்டை விட செவிக்கு அதிக இனிமை தருவது மிக தூய மகிழ்ச்சியை விட இதயத்திற்கு அதிக இன்பமளிக்கிறது.

**செபம்:** பதுவை புனித அந்தோணியாரே! உமது வல்லமையுள்ள மன்றாட்டால் நாங்களும், இறைவனது இரக்கத்தையும், உதவியையும், பெற்றவர்கள் உம்மோடு என்றென்றும் இறைவனைப் புகழ்ந்தேத்தும் வரம் பெற்றுத் தருவீராக ஆமென்....



# வாருங்கள் செபியுங்கள் உங்கள் ஜெபம் வீண் போகாது

**கோடி அற்புதரின் பக்தர்களே!**

கோடி அற்புதரான புனித அந்தோணியார் கடவுளல்ல அவர் ஒரு இறை அடியாரே. புனிதர்களில் மக்களால் மிகவும் விருப்பப்படும் குறிப்பிடத் தக்கவர் இறை அருளால் கோடி புதுமைகள் செய்பவர். நமக்காக இறைவனிடம் தினமும் பரிந்து பேசுபவர். ஆம் நாம் இவ்வுலகில் பயணிக்கும் தோணியாகிய இயேசுவிடம் அழைத்துச்செல்லும் அந்தோணி அவர்.

நாம் வாழும் பாலவாக்கம் மற்றும் அவனி அனைத்தையும் ஆலமரமாய் பாதுகாக்கும் அற்புதர் இவர். நாம் இன்பமாக வாழ நமக்காக இறைவனிடம் பரிந்துபேசி வேண்டி நிற்பவர்.

நாம் இறைவனை சென்றடைய வழிகாட்டும் நம் புனிதரின் பாதையில் நாம் சென்றிடுவோம். கூடிவாழ்ந்து நாம் கோடி அற்புதரின் பெருமைகளை சொல்லிடுவோம். நாளெல்லாம் கோடி அற்புதரின் புகழ்பாடி ஏராளமான அருள் வரங்களைப் பெற்றிடுவோம்.

பழுத்த மரத்தை நாடி பறவை கூட்டங்கள் வருவதைப்போல தாங்கள் கேட்கும் அருள் வரங்களை அற்புதர் புனித அந்தோணியார் வழியாக பெற்றுச் செல்ல இந்த 25 வருடங்களில் பக்தர்கள் நாடிவரும் இந்த புனித திருத்தலம் ஓர் அருட்கருவியாக இருக்கிறது, என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பாலவாக்கம் கடற்கரை புனித அந்தோணியார் பக்தர்களே! உங்களது சோதனைகள், வேதனைகள் தீர கோடி அற்புதரின் ஆறுதல அன்பையும், பரிந்துரையையும் பெற, அவரை நாடி பாலவாக்கம் கடற்கரை புனித அந்தோணியார் திருத்தலத்திற்கு குடும்பமாய் வாருங்கள். விசேடமாக ஜீன்மாதம் 10ம் தேதி தேதியிலிருந்து 13ம் தேதி வரை நடைபெறும் திருவிழா திருப்பலிகளுக்கு வாருங்கள். கோடி அற்புதரின் அற்புதங்களை நிச்சயமாக உணருவீர்கள்.

ஜுன் 10ம் தேதி கோடி அற்புதரின் திருக்கொடியேற்றம், மற்றும் சிறப்பு திருப்பலியும், ஜுன் 11ம் தேதி நற்கருணை திருவிழா திருப்பலி மற்றும் நற்கருணை பவனியும், ஜுன் 12ம் தேதி தேர்த்திருவிழா திருப்பலி மற்றும் தேர்பவனியும், ஜுன் 13ம் தேதி திருக்கொடியிறக்க நிகழ்வு மற்றும் திருப்பலியும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 13 செவ்வாய் கிழமைகள் இத்திருத்தலத்தை தரிசியுங்கள். காலை 6.30மணி, பகல் 11.00 மணி, பிற்பகல் 3.00 மணி, மாலை 6.15 மணிகளில் நடைபெறும் ஏதாவதொரு வழிப்பாட்டில் கலந்து கொண்டு செபியுங்கள் 13வது வார இறுதியில் அதிசயத்தை கண்டுணருவீர்கள் மந்திரித்த எண்ணெயைப் பெற்று மெழுகுத் திரிகளை ஏற்றி விசுவாசத்துடன் செபியுங்கள் உங்கள் செபம் வீண்போகாது.

நோயுற்றோரையும், மனம் பாதித்தவர்களையும்,

அழைத்துவாருங்கள் செபியுங்கள்

விசுவாசத்துடன் கூடிய செபம் நிச்சயம் சுகம் அளிக்கும்.
வாருங்கள், ஜெபியுங்கள்
உங்கள் செபம் வீண்போகாது

# தாக்கத் தாக்க தாக்கத்தை ஏற்படுத்திய இயேசு

காந்தி ரோஸ்



அமெரிக்க நாட்டைச் சார்ந்த லூயிஸ் வாலஸ் ஓர் எழுத்தாளர், அரசியல்வாதி, இராஜதந்திரி, கடவுள் மறுப்பாளர் எனப்படும் நாத்திகர். கிறிஸ்தவத்தை அழிக்கக்கூடிய, சீர்குலைக்கக் கூடிய தகவல்களை அமெரிக்காவின் முன்னணி நூலகங்களில் தேடித் தேடிப் படித்து, கிறிஸ்தவத்துக்கு எதிரான தனது வாதங்களைக் கோடிட்டுக் காட்டி புத்தகமும் எழுதத் தொடங்கினார். புத்தகத்தின் இரண்டாம் அத்தியாயத்தை எழுதும்போது திடீரென மனம் உடைந்து போன நிலைக்கு வந்தவர் தன்னையறியாமல் மண்டியிட்டு இயேசுவை நோக்கி "என் கடவுளே, என் ஆண்டவரே" என்றார். இயேசுகிறிஸ்து கடவுளின் மகன் என்பது குறித்த உறுதியான, மறுக்க முடியாத ஆதாரங்களை எதிர்கொண்ட அவரால் மேற்கொண்டு இயேசுவுக்கு எதிராக எதையும் எழுத முடியவில்லை. பின்னாளில் கிறிஸ்துவின் காலம் குறித்த Ben Hur: A Tale of the Christ என்னும் மிகச் சிறந்த ஆங்கில நாவலை உருவாக்கினார். அதுவே 'பென்ஹர்' என்னும் மிகப் பிரம்மாண்டமான திரைப்படமாக உருவெடுத்தது. இயேசு குறித்து தாக்கப்போய் அவருடைய தாக்கத்தை உள்வாங்கிக் கொண்ட இதுபோன்ற நிகழ்வுகள் உலகில் ஏராளம் ஏராளம்.

### இயேசுவின் மீதான தாக்குதல் முயற்சிகள்

இயேசு பிறப்பின்போது ஏரோது மன்னனால் தொடங்கப்பட்ட கொலை முயற்சி இறுதியில் ஆளுநன் பிலாத்துவின் சிலுவை மரணத் தீர்ப்பில்தான் நிறைவு பெற்றது. வாழ்வு முழுக்க தாக்குதலைச் சந்தித்த இயேசுவின் போதனைகளில் வெளிப்பட்ட உண்மைகள் சமய வெறியாளர்களின் இரத்த அழுத்தத்தை அதிகரித்தது. எதிரிகள் அவரைக் கொன்றுவிடத்

திட்டமிடுமளவுக்கு தம் போதனைகள், நற்செயல்கள், அற்புதங்களால் மக்களிடையே இயேசு தாக்கத்தை ஏற்படுத்தியதுதான் காரணமாயிற்று.

இயேசு தம் இறையாட்சிப் பணியைத் துவங்குகையில் எருசலேம் ஆலயத்தில் எசாயாவின் ஏட்டுச்சுருளை வாசித்தவர், இறைவாக்கினர்கள் யூதர்களுக்காக மட்டுமல்ல, பிற இனத்தாருக்காகவும் அனுப்பப்பட்டவர்கள் என்று விளக்கமளிக்க அவரை ஊருக்கு வெளியே துரத்தி, மலையிலிருந்து தள்ளிவிட எதிரிகள் முயன்றது முதல் தாக்குதல். அடுத்து ஓய்வுநாளில் கை சூம்பிய மனிதனைக் குணப்படுத்தியதற்காக இயேசு யூத மரபை மீறிவிட்டார் என்று அவருக்கு எதிரான சூழ்ச்சி தொடங்கியது. பெத்சதா குளக்கரையில் முப்பத்தெட்டு ஆண்டுகளாகக் கிடந்த நோயாளியை ஓய்வுநாளில் குணப்படுத்த மீண்டும் அதே மரபு மீறல் பிரச்சனை. அங்கிருந்து அன்று இயேசு நழுவி விட்டார், ஆனால் அவரால் குணமானவர் எதிரிகளிடம் சிக்கித் துன்புற்றார். இன்னொரு நிகழ்வாக இயேசு போதிக்கையில் ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே தாம் இருப்பதாக உறுதியாகக் கூறுவதைக் கண்டு அவரைக் கற்கள் கொண்டு தாக்க முயன்றனர். இயேசு அங்கும் தப்பிச் சென்றார். எருசலேமில் கோவில் அர்ப்பண விழா நடந்தபோது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு விவாதித்தபோது தாம் மெசியா, இறைவனின் மகன் என்று அறிவிக்கக் கேட்ட யூதர்கள் அவரைப் பிடிக்க முயன்றார்கள், நடக்கவில்லை. நண்பர் இலாசரை உயிரோடு எழுப்பிய செய்தியால் மக்கள் இயேசுவைப் பின்பற்றுவது அதிகரிக்கத் தொடங்கவே அதுவரை தாக்கத் திட்டமிட்டவர்கள் அவரைக் கொலை செய்ய முடிவு செய்தனர். திராட்சைத் தோட்ட குத்தகைக்காரர் உவமையில் கடவுளின் அரசு யூதர்களிடமிருந்து எடுக்கப்படும் என்ற அவரின் கருத்தோட்டத்தால் சினமுற்ற மறைநூல் அறிஞர்களும், தலைமைக் குருக்களும் அவரைக் கைது செய்ய வழி தேடினர். இயேசு கோவிலுக்குள் சென்று அங்கு விற்பனை செய்து கொண்டிருந்த வியாபாரிகளை கயிறு பின்னிய சாட்டையால் அடித்து துரத்தியதைக் கண்ட யூதர்கள், அவர் அளவுக்கு மீறி அதிகாரத்தை தன் கையில் எடுத்துக் கொள்கிறார் என்று முடிவுகட்டி அவரை ஒழித்துவிட வழி தேடினர். தாக்குதல், கைது, கொலை முயற்சி என சிக்கலான சூழல்களிலும் தம் இறையாட்சிப் பணியை எள்ளளவும் பிசகாமல் தொடர்ந்ததும், தம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றியதும் தான் அவர் வெற்றியின் சிறப்புக்கூறு. இயேசுவின் மரணத்திற்குப்பின் அவரின் சீடர்களுக்கும், நம்பிக்கையாளர்களுக்கும் தாக்குதல்களும், கொலைகளும் நிகழ்ந்தது வரலாறு.

## நம்பிக்கையாளர்களுக்கு நேர்ந்தவை

தொடர்ந்து இயேசுவின் அசைக்க முடியாத நம்பிக்கையும், பிறருக்காக அவர் மரண வேதனைகளைச் சந்தித்து உயிர் கொடுக்கத் தயாராக இருந்ததும், எதிர்ப்புகளின் மத்தியிலும் எவ்வாறு மனிதர்களில் பாகுபாடு பாராமல் அன்பு செலுத்தி சேவை செய்வது என்பதற்கு அவர் வாழ்வு ஒரு சக்தி வாய்ந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. சிலுவை மரணத்தை நிகழ்த்திய எதிரிகள் மீது அவர் ஏற்படுத்திய தாக்கம் ஆழமானது. பின்னர் அவர்களில் பலர் மன்னிப்பு, அன்பு மற்றும் சுய தியாகத்தால் மீட்பு மற்றும் நல்லிணக்கத்தை நாடினர்.

இயேசுவின் சிலுவைச் சாவால் அஞ்சிய பதினோரு சீடர்களும், தலைமறைவாகிட எருசலேமை விட்டு கலிலேயாவுக்கு இடம் பெயர்ந்து, அங்கு உயிர்த்த இயேசுவை சந்தித்த பின்னர் நற்செய்தியைப் பரப்புவதில் தீவிரமானார்கள். இயேசுவின் உயிர்ப்பைத் துணிவோடு அறிவித்து புதிய சமய நெறியைப் பரப்பியதால் சித்திரவதைக்குள்ளாகிக் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவம் தோன்றிய யூத நிலத்திலும், முதலில் பரவிய ரோமானிய மண்ணிலும் சமயப் போதகர்கள் மற்றும் சமயம் மாறிய கிறிஸ்தவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகி பெருமளவில் மறைச்சாட்சிகளாக உயிர் நீத்தனர். திருத்தொண்டர் ஸ்தேவானின் மரணமே முதல்

மறைச்சாட்சி மரணம். சீடர்கள் மற்றும் அவர்கள் வழி வந்தவர்களின் போதனையால் ஆரம்ப காலக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டம் மாற்றமடைந்தது. இயேசுமீது அவர்கள் வைத்த அன்பானது, துன்புறுத்தல் மற்றும் மரணத்தை அஞ்சாமல் எதிர்கொள்ளத் தூண்டியது. பலர் தங்களின் சொந்தத் தேவைகளையும், விருப்பங்களையும் மறந்து பிறருக்கு சேவை செய்வதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள்.

### சவுல், பவுலான தாக்கம்

பழைமைவாதம் நிறைந்த யூத சமயக் கொள்கையில் ஊறிப்போன சவுலுக்கு தொடக்க காலக் கிறிஸ்தவர்களை சிறைப்பிடித்து துன்புறுத்தி அவர்களுக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையில் அவருக்குப் பெரும் பங்கிருந்தது. ஆனால் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் அவர் சந்தித்த உயிர்த்த இயேசுவின் தாக்கம் அவர் வாழ்வை புரட்டிப் போட்டது. தன் இன யூத மக்களிடையே தனக்கிருந்த செல்வாக்கைத் தூக்கி எறிந்துவிட்டு இயேசுவை அறிவிப்பதற்காக நம்ப முடியாத துன்பங்களை அனுபவிக்கும் பவுலாக மாறி, யூதர் அல்லாதவருக்கு இயேசுவைக் கொண்டு சேர்த்தவர்களில் முதலிடம் கொண்டார். இயேசுவின் மக்களை இடைவிடாமல் தாக்கியவருக்கு ஒரேயடியாக இயேசுவே தாக்கத்தை ஏற்படுத்தியதுதான் புனித பவுலின் மனமாற்றம். அதன் பின்னரே அவருடைய சொந்தத் துன்பங்களின் பட்டியல் தொடங்கியது.தொடக்க கால கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளாகிக் கொல்லப்பட்டனர். ரோமானியர்களுக்கு எதிரான முதல் யூதக் கலகம் கி.பி.70 இல் எருசலேமின் அழிவுக்கு வழி வகுத்தது. ஆலயம் அழிக்கப்பட்டதுடன், அழிவுற்ற யூத மதம் மீண்டும் எருசலேம் ஆலயம் எழும்பும் காலத்தில் ரபினி யூத மதம் என்ற பெயரில் எழுச்சி பெற்றது. அதே சமயம், புதிய கிறிஸ்தவத்துக்கான வழியும் பிறந்தது. நாசரேத்தின் இயேசு யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மெசியா மட்டுமல்ல, அவர் கடவுளின் மகன், கடவுளின் ஆசீர்வாதத்தை யூதர்களைக் காட்டிலும் புறவினத்தாருக்கு அவர் அதிகமாக வழங்குகிறார் என்ற நம்பிக்கையை புதிய கிறிஸ்தவம் அடிப்படை ஆக்கியது.

திருத்தூதர்கள் பேதுருவும், பவுலும் கொல்லப்பட்ட பிறகு வேகம் பிடித்த கிறிஸ்தவத்தின் வளர்ச்சி ரோமானியப் பேரரசர்களுக்கு சவாலாக அமைந்தது. நம்பிக்கையாளர்கள் தீயில் எரிக்கப்பட்டும், ஆயுதங்களால் தாக்கப்பட்டும், அறுக்கப்பட்டும், காட்டு விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டும், மெழுகு, குங்கிலியம் போன்றவற்றை உருக்கி கொதிக்கக் கொதிக்க தலையில் ஊற்றி உயிரோடு கொளுத்தப்பட்டும், எண்ணெய் கொப்பறையில் போடப்பட்டும், கும்பல் கும்பலாகக் கொல்லப்பட்டும் மறைச்சாட்சிகள் ஆனார்கள். திருத்தந்தையர்களும் கொல்லப்பட்டனர். வேத கலாபனைகள் எனப்படும் மறைக்கலகங்கள் நிகழ்ந்தன. நீரோ மன்னனில் துவங்கி தியோக்ளேசியன் காலம் வரை ரோமில் நடைபெற்ற கொடுமைகள் கிபி 306இல் முடிவுக்கு வந்தது. எனினும் கிபி 311இல் கலேரியஸ் பேரரசனின் 'செர்டிகாவின் ஆணை' கிறிஸ்தவத்துக்கு மதச்சார்பற்ற அந்தஸ்தை வழங்கியது. கிபி 312இல் மிலான் ஆணை சட்டபூர்வமாக்கியது. கிபி 381இல் கான்ஸ்டன்டைன் ரோமானியப் பேரரசின் அதிகாரப்பூர்வ சமயமாக்கினான்.

உலகில் கிறிஸ்தவத்தைஅழிக்கும் முயற்சிகள் தொடர்ந்தன. நாத்திக அரசுகளைக் கொண்ட பல்வேறு நாடுகள் இதில் தீவிரமாக செயல்பட்டன. தேவாலயங்கள் அழிந்தன, புனித நூல்கள் எரிக்கப்பட்டன, ஆலய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன, கிறிஸ்தவர்களுக்கு சட்ட நடவடிக்கைகளில் தடை, சலுகைகள் இழப்பு, கிறிஸ்தவஅரசு அதிகாரிகள் கைது எனதுயரங்கள் நிகழ்ந்தன.

எவ்வாறு இயேசு தொல்லைகள், பாடுகள் அனுபவித்து தம் உயிர்ப்பால் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தினாரோ, அவ்வாறே நம்பிக்கையாளர்கள் துணிந்து செய்த உயிர்த் தியாகங்களால் கிறிஸ்தவம் மாபெரும் வளர்ச்சியைக் கண்டது. எனினும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவம், கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள், ஒடுக்குமுறைகள் முடிவுக்கு வந்ததாக இல்லை. உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே கிறிஸ்தவர்கள் என்றாலும் இந்தியா உட்பட உலக நாடுகளில் சமயப் பாகுபாட்டின் பெருமளவு சுமையை கிறிஸ்தவர்களே இன்றும் சுமக்கிறார்கள்.

### வரலாற்றில் இயேசுவின் தாக்கம்

இயேசுவின் வரலாறு முழுக்க மக்களின் வாழ்வில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தை யாருமே மிஞ்சியதில்லை. உலகில் வேறு எந்த ஒரு தலைவரும் தம்மைப் பின்பற்றுபவர்களின் வாழ்க்கையில் இவ்வளவு நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தியதில்லை. இத்தனைக்கும் அவர் தம் வாழ்நாளில் எதிரிகளின் இடைவிடாத தாக்குதலுக்கு ஆளாகியிருந்தார். அவற்றைத் தாக்குப் பிடித்து தம் நற்செய்தியை ஏழை, எளிய மக்களிடம் பரப்பியவர், ஒரு கட்டத்தில் தாங்க முடியாதபடிக்கு தாமே தாக்குதலுக்கு உள்ளாகி சிலுவை மரணமும் அடைந்தார்.

உலக வரலாறு மற்றும் கலாச்சாரங்களில் இயேசு ஏற்படுத்திய தாக்கம் குறித்து பிலிப் ஷாஃப் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார் "நாசரேத்தின் இயேசு, பணமும் ஆயுதங்களும் இல்லாமல், மகா அலெக்சாண்டர், சீசர், முகமது மற்றும் நெப்போலியன் ஆகியோரை விட மில்லியன் கணக்கானவர்களை வென்றார்' அறிவியலும் கற்றலும் இல்லாமல், அனைத்து தத்துவ ஞானிகள் அறிஞர்களைக் காட்டிலும் மனித மற்றும் தெய்வீக விஷயங்களில் அவர் அதிக வெளிச்சத்தை வெளிப்படுத்தினார்' பள்ளி சென்று கற்காமல், இதற்கு முன்பும் அதற்குப் பிறகும் எவராலும் பேசப்படாத வாழ்க்கை வார்த்தைகளைப் பேசினார், மேலும் ஒரு பேச்சாளர் அல்லது கவிஞரின் எட்டாத விளைவுகளை உருவாக்கினார்' ஒரு வரிகூட எழுதாமல், அவர் அதிக எழுதுகோல்களை இயக்கினார், பழங்கால மற்றும் நவீன காலத்தின் அதிகாரமிக்கவர்களின் முழுப்படையையும் விட அதிகமான மறையுரைகள், சொற்பொழிவுகள், விவாதங்கள், கற்ற தொகுதிகள், கவிதைகள், கலைப்படைப்புகள், புகழ்ச்சிப் பாடல்களுக்கு அடிப்படையான கருப்பொருள்களை வழங்கினார்".

இயேசு அறியப்படாத ஒரு கிராமத்தில் பிறந்து முப்பது வயதுவரை தந்தையின் தச்சுக் கடையில் வேலை கற்று, வேலை செய்தார். அவர் ஒரு புத்தகமும் எழுதவில்லை. ஒரு பதவியும் வகித்ததில்லை. கல்லூரி போனதில்லை, பெரிய நகரம் எதற்கும் சென்றதில்லை. இருநூறு மைல்களுக்குமேல் பயணித்ததில்லை. பிறந்த இடத்திலிருந்து எதையும் செய்யவில்லை. யூதர்களுக்காக 12 திருத்தூதர்களையும், புற இனத்தாருக்காக 72 சீடர்களையும் தேர்ந்தார். அவர்களும் அறிஞர்களோ, தலைவர்களோ அல்ல. இதுவரை அணிவகுத்துச் சென்ற அனைத்துப் படைகளும், இதுவரை கூடிய அனைத்து நாடாளுமன்றங்களும், இதுவரை ஆட்சி செய்த அனைத்து மன்னர்களும் ஏற்படுத்த முடியாத நல்லரும் பாதிப்புக்களை, தாக்கங்களை மனித குல வாழ்வில் இயேசு ஏற்படுத்தினார். இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் மனித இனத்தின் மைய நபராக விளங்கி மக்கள் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறவராகவே இயேசு இன்றும் திகழ்கிறார்.

# பத்துப் பேருக்காக

லூர்து எஸ். ராஜ்



21ஆம் நூற்றாண்டில் ஒருநாள் உலகுக்கு வந்த ஆண்டவர் ஆபிரகாமையும் தம்முடன் அழைத்துக்கொண்டு மலையின் உச்சிக்கு ஏறினார். அங்கிருந்து உலகம் முழுவதையும் அவரால் பார்க்க முடிந்தது. ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குழந்தையும் அவர் கண் பார்வையில் தெளிவாகப் பட்டனர். அவர் பார்வையிலிருந்து எவரும் தப்பவில்லை. எந்த நாடும் நகரமும் ஊரும் மறைக்கப்படவில்லை. உடன் வந்த ஆபிரகாமுக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. பழைய கால சோதோம் கொமோரா ஊர்களைப்போல் ஆண்டவர் உலகை அழிக்க வேண்டும் என்று பிளான் பண்ணிவிட்டாரா? பின் எதற்காக தன்னையும் உடன் அழைத்து வந்து உலகைக் காட்டுகிறார்? என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டார்.

ஆபிரகாமின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட ஆண்டவர் "ஆபிரகாம், நீ வாழ்ந்த மம்ரே சிற்றூருக்கு நானும் என்னோடு இருவரும் சேர்ந்து உன் வீடு தேடி வந்ததும், வீட்டு முன்னிருந்த நிழல்தரும் மரத்தடியில் சுடச்சுடத் தயாரான அப்பங்களோடு வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகியவற்றை எங்களுக்குப் பரிமாறி உபசரித்ததும், அப்போது உன் அண்ணன் மகன் லோத்து குடும்பத்தைக் காப்பாற்ற என்னிடம் 50,40,30,20,10 என்ற என்ற நீதிமான்கள் எண்ணிக்கையில் சோதோம் கொமோரா மக்களைக் காப்பாற்றக் கேட்டுக்கொண்டதும் நினைவுக்கு வருகிறதா?" என்று கேட்டார். ஆமாம் என்னும் பாவனையில் தலையசைத்தார் ஆபிரகாம்.

"அப்போது அந்த மக்கள் திருந்தினார்களா என்ன, இல்லையே. விண்ணகத்தில் ஏழை இலாசர் உன் மடியில் இருக்கக் கண்ட செல்வந்தன் உன்னிடம் என்ன கேட்டான்?

நரகத்தில் தான் படும் பாட்டை தனது ஐந்து சகோதரர்களுக்கு சொல்லச் சொன்னானே, ஒருவேளை நரகத்திற்குப் போகும்போதுகூட செல்போனைப் பிரியாதவனாய் இருந்திருந்தால் மெசேஜ் அனுப்பிக் கூட எச்சரித்திருப்பான் இல்லையா? என் மைந்தர் சொன்னதுபோல மோசேக்கும், இறைவாக்கினருக்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. இப்போதுள்ள மக்கள் குருக்களுக்கும் செவி சாய்ப்பதில்லை. அக்காலத்து சோதோம் கொமோரா அழிவு என்பது என் திருக்குமாரர் இந்த உலகில் மனித அவதாரம் எடுப்பதற்கு முந்தைய 18ஆம் நூற்றாண்டு. இப்போது போன்று தொலைத்தொடர்பு கருவிகள் ஒன்றுகூட இல்லாத காலம். 38 நூற்றாண்டுகள் கழிந்து விட்டது. இப்போது நான் அழிவை ஆரம்பித்து விட்டேன் என்றால் எல்லா மக்களும் ஒருவரையொருவர் எச்சரித்து தப்பிக்க வழி தேடுமளவுக்கு செல்போன் கருவி பயனுக்கு வந்துவிட்டது" என்றார். ஆபிரகாமுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஆண்டவரே சொன்னார் "இதோ இந்த உலகின் மக்களை நீயே உன் கண்கொண்டு நேரடியாகப் பாரேன்" என்றார். ஆபிரகாமும் பார்த்தார்.

செல்போன் இல்லாதவர் என்று அங்கு யாரும் இல்லை. 50 ஆயிரம் ரூபாய் ஆண்ட்ராய்டு முதல் இரண்டாயிரம் நோக்கியா வரை எல்லாரிடமும் அது இருந்தது. சிலர் ஒரு போனில் இரண்டு சிம் கார்டுகளைப் போட்டுப் பேசினர். இன்னும் சிலர் 2 சிம் கார்டு போட்ட இரண்டு செல்போன்கள் வைத்திருந்தனர். இளவட்டங்கள் இடுப்பில் ஒரு பேஜரும் கையில் ஒரு செல்லுமாக ஆட்டிக் கொண்டிருந்தனர். சிறுவர் சிறுமிகளும் விதிவிலக்கல்ல. பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் அவர்கள் உடனே செல்லைக் கையில் எடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு முகநூல், வாட்சப், டிவிட்டர், இன்ஸ்டாகிராம் என எல்லா வசதியும் இருந்தது. 'செல் இல்லாதவர் தில் இல்லாதவர்' என்ற புதுமொழி எல்லா செல்போன் கடைகளிலும் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

ஆலயத்துக்கு காரில் வந்தவர்களும் செல்போனுடனே வந்தனர்' எல்லாரது போனிலும் வாட்சப் இணைப்பு இருந்தது. வரும் வழி எல்லாம் செல்போனில் சிலர் சினிமாப் படமும் இன்னும் சிலர் கிரிக்கெட் மாட்ச்சும் பார்த்துக் கொண்டே வந்தனர். இன்னும் சிலர் காதில் இயர்போன் வைத்துக்கொண்டு செல்போனில் பாடல் கேட்டுக் கொண்டிருந்தனர். சிலர் காருக்குள் அதை வைத்து விட்டு கோவிலுக்குள் சென்றனர். இன்னும் சிலரோ அதைக் கையில் பிடித்தபடியே உள்ளே நுழைந்தனர். கோவிலில் திருவழிபாடு ஆரம்பமானது. சிலர் வெளியில் நின்று போன் பேசிக்கொண்டிருந்தனர்.

கோயிலுக்கு முன்னால் சுமார் 50 பிச்சைக்காரர்கள் சாலையின் இரு பக்கங்களிலும் வரிசையாக அமர்ந்திருந்தனர். அந்த வரிசையின் நீளம் சுமார் 20 அடி தூரமாவது இருக்கும். வரிசையில் கடைசியாக இருந்த பிச்சைக்காரர் முதலில் இருப்பவரிடம் செல்போனில் பேசிக்கொண்டிருந்தார். "ஏ, இலங்கா மணி, இன்றைக்கு முத்து வரவில்லை' அதனால் நாளை வரிசையில் நான்தான் முதலாவதாக இருப்பேன். மறக்காமல் சொல்லி வை என்றார். 'அதெல்லாம் எனக்குத் தெரியாது' நீ பூண்டி ஏரியா தலைவரிடம்தான் போன் பேசி முடிவு செய்து கொள்ள வேண்டும்' என்று பதிலளித்தார் அவர்.

இப்போது ஆண்டவர் கேட்டார் “ஆபிரகாமே பார்த்தாயா? அன்று பத்து பேர் இருந்தாலும் நான் அழிக்க மாட்டேன் என்று சொன்ன உலகம் போல் இல்லையே என்று யோசிக்கிறாயா? சோதோம் கொமோரா நகரங்களின் பாலியல் பாவச் செயல்களுக்கு மதுவும், தீமையான பார்வைகளும் பேச்சுக்களும் மட்டுமே காரணங்களாக இருந்தன. இன்றும் அதே காரியம், அதே காரணம், எதுவுமே மாறவில்லை, கூடுதலாக ஒன்றைத்தவிர. அது செல்போன் பயன்பாடுதான்"

ஆபிரகாமுக்கு தாம் சொல்வது புரியவில்லை என்பது ஆண்டவருக்குப் புரிந்தது. "இன்றும் மாறாத பாலியல் பாவச் செயல்களுக்கு இக்காலத்தில் மதுவும், செல்போனுமே முக்கியக் காரணிகளாகின்றன. சிறியவர் சிறியவர் பெரியவர் என்றில்லாமல் எல்லோருக்குமே இவை எளிதில் பாவங்களுக்கு வழிகாட்டுகின்றன. செல்போனை வைத்து நல்வினை செய்யட்டும்' புண்ணியத்தை சம்பாதிக்கட்டும். தீமையான காரியங்களுக்கும் பாவப் பழக்கத்துக்கும் அதைப் பயன்படுத்துவோர் குறித்துத்தான் கவலைப்பட வேண்டியிருக்கிறது. உலகத்து மனிதர்களில் பாவக் காரியத்துக்குப் பயன்படுத்தாமல் நற்காரியங்களுக்கு மட்டும் செல்போனை பயன்படுத்தும் 10 பேர் இருந்தாலும் இந்த உலகத்தை தண்டிக்காமல் இருந்து விடுவேன்” என்றார். 'அன்றுபோல பத்துப் பேருக்காக இன்றும் விட்டு வைப்பேன் என்கிறாரே, அந்த பத்துப்பேரை இன்று எங்கு போய் தேடுவதோ?' ஆபிரகாம் தன் கைகளை தலைக்கு மேல் குவித்து ஆண்டவரை வாழ்த்திப் போற்றினார்' நன்றி கூறினார்.

ஆண்டவர் பார்வையில் அந்த பத்துப் பேர் தென்பட்டதை ஆபிரகாமும் கவனித்தார். அவர்கள் நவீன காலத்து கிறிஸ்தவர்களாய் இருந்தாலும், எந்தவித மனசஞ்சலமோ தடுமாற்றமோ இல்லாமல் தங்கள் செல்போனில் திருவிவிலியத்தையும், திருப்பலி ஜெபங்களையும், பாடல்களையும், மாதா மற்றும் புனிதர்கள் பக்தி பாடல்களையும் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொண்டிருந்தனர். நன்மையான காரியங்களுக்கு மட்டுமே அவர்களின் செல்போன்கள் பயன்பட்டிருந்தன. செல்போனின் மற்ற செயலிகள் எதிலுமே அவர்கள் நாட்டம் போனதாகத் தெரியவில்லை. அந்த பத்துப் பேர்களால் உலக அழிவு தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறதோ என்னவோ? ஆபிரகாம் யோசிக்கலானார்.

# "அன்பு இயேசுவின் அன்பு அது அளவிட முடியாதது"

திருமதி. **நற்கருணைமேரி**

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் இயேசுவின் திரு இருதய பெருவிழாவை நம் தாய் திரு அவை மகிழ்வுடன் கொண்டாடி வருகின்றது. அன்று கல்வாரி மலையில் இயேசுவின் இதயத்தில் நின்று இரக்கத்தின் ஊற்றாகப் பெருகிய அன்புதான் இன்றுவரை நம் ஒவ்வொருவரையும் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

கனிவும், பரிவும், இரக்கமும் கொண்டதுதான் இயேசுவின் இதயம். நான் கனிவும் மனத் தாழ்மையும் உடையவன். என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத் 11:29) என்கிறார் இயேசு.

இயேசுவின் அன்பு மனிதனுடைய அன்பைப் போன்று சாதாரணமான அன்பு கிடையாது. அது அளவிட முடியாதது.

எல்லையில்லாத அன்பு. புனித பவுல் அடியார், "கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக" (எபே 3: 18) என்று கூறுகிறார். நற்செய்தி முழுவதும் இயேசுவின் அன்பு செயல்கள்தான் கொட்டிக் கிடக்கின்றன.

எடுத்துக்காட்டாக இயேசுவின் அன்புதான் கானா ஊரில் திருமண வீட்டில் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றியது. திருமண வீட்டாரின் கவலையைப் போக்கிய கரிசனமான அன்பு. இறந்த லாசரை உயிரோடு எழுப்பிய நட்பின் அன்பு (யோவா11: 1 44). "தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என்று உரக்க கூவி அழைத்த கண் தெரியாதவருக்கு பார்வை கொடுத்த பரிவின் அன்பு (மாற் 10: 4652). நூற்றுவர் தலைவனின் வேலைக்காரனை நலமாக்கிய பாரபட்சம் இல்லாத அன்பு (லூக் 7: 1 10). சீமோனின் மாமியாரை குணப்படுத்திய தாய்மையின் அன்பு (லூக் 4: 38 41). ஆடையை தொட்ட உடனேயே இரத்தப்போக்கு உடைய பெண்ணை குணமாக்கிய அதிசய அன்பு (மாற் 5:2134). தொழுகை கூட தலைவர் யாயிரின் இறந்த மகளை உயிர்த்தெழச் செய்த ஆற்றலின் அன்பு (மாற் 5: 35 43). சூம்பிய கை உள்ளவரை ஓய்வு நாளில் குணமாக்கிய சட்டத்திற்கு அப்பாற்பட்ட நீதியின் அன்பு (லூக் 6: 6 11). வாய் பேச இயலாத வரை தீய ஆவியை அவரிடம் இருந்து விரட்டி பேசச் செய்த அதிகார அன்பு (மத் 9:32). நயீன் ஊர் கைம்பெண் மகனை உயிர்ப்பித்து பாடையில் இருந்து இறக்கிய பரிவின் அன்பு (லூக் 7: 1113). தம்மை சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னிக்கும்படி தம் தந்தையிடம் வேண்டிய வஞ்சனை அற்ற அன்பு, தமக்காக பரிந்து பேசிய நல்ல கள்ளனுக்கு மன்னிப்பையும் வான்வீட்டையும் பரிசாக அளித்த அதீத அன்பு. சிலுவையடியடியில் நம்மையெல்லாம் நிர்க்கதியாக விட்டுச் செல்லாமல் தன் தாயை நமக்கு தாயாக தந்த தியாகத்தின் அன்பு. இறுதியில் கல்வாரி மலையில் ரத்தம் சொட்ட சொட்ட தன்னுயிர் ஈந்து நம்மை மீட்டெடுத்த பேரன்பு.

இவ்வாறு நம்மை அன்பு செய்யும் இயேசுவின் இதயம் அன்பிற்காக ஏங்குவதாக புனித மார்கிரேட் மரியாளிடம் இயேசு கூறியுள்ளார். மேலும் குடும்பங்களை தம்முடைய இதயத்திற்கு ஒப்புக்கொடுத்த ஜெபிக்க வேண்டும் என்றும், பாவப் பரிகாரங்கள் செய்ய வேண்டும் என்றும், இத்தகு திரு இருதய பக்தி முயற்சிகளை கடைப்பிடித்தால் அதற்கான பலன்கள் கிடைக்கும் என்றும், தமது இதயத்தின் தெய்வீக அருள் வரங்களால் வளப்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் மீட்பையும் அடையலாம் என்றும் கூறியுள்ளார்.

எனவே இம்மாதத்தில் இயேசுவின் திரு இருதய பக்தி முயற்சிகளை கவனமுடன் மேற்கொண்டு இயேசுவின் அளவிட முடியாத அன்பின் அருள் வரங்களை பெற்று மகிழ்வோமாக!



# என்றும் வாழும் நம் அன்னை

திருமதி. **அஜீன் விக்டர்**

அன்னையாகக் கொடுக்கப்பட்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியா நமக்கு அவருடைய பிறப்பு முதல் இறப்புவரை எல்லாமே அதிசயம் ஏன் ஓர் இரகசியம் நாம் இதுவரை அறிந்திருந்தது அதாவது மரியன்னையின் திருவுடல் அழியவில்லை என்பதற்கான சான்றை நற்செய்தியில் தெளிவாகக் காணாவிடிலும், திருச்சபை அமல உற்பவமாகப் பிறந்த மாதா ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகம் எடுத்துச் செல்லப்பட்டார். என்பதை வலியுறுத்துகிறது.

திருத்தூதர்களும் மரியன்னையிடம் வந்து மாதாவின் மரணவேளையில் எல்லா சேர்ந்தனர். புனித தோமையார் மட்டும் வரவில்லை இறைமகன் இயேசு வான தூதர்கள் புடைசூழ தனது தாய் இருந்த இராப்போசன உணவு அறைக்குள் வந்தார். இயேசு தாயிடம் "நீர் சென்ம பாவமின்றி பிறந்தால் மரணத்திற்கு உம்மேல் அதிகாரம் இல்லை ஆகவே இறக்காமலே உமது மகிமையைப் பெற்றுக் கொள்ள வாரும்" என்றார். அதற்கு அன்னை தலைவணங்கி 'மெய்யான இறைவனாகிய நீரே சாவின் வழியாய் சென்றிருக்க நானும் சாவின் வழியாய் மகிமையில் பங்கு பெற உம்மை மன்றாடுகிறேன்' என்றார்.

மக்கள் திரண்டு வந்தனர். மரியா அமைதியாக படுத்து கரம் குவித்து தன் மகன் இயேசுவைப் பார்த்தார். 'ஆண்டவரே எனது ஆன்மாவை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன். என்று கூறி கண்களை மூடி உயிர் நீத்தார். பிறகு மரியாவின் திருவுடலை ஜோசப்பாத் கணவாய்க்கு கொண்டு சென்று அனைத்து தூதர்களும் நல்லடக்கம் செய்தனர். மூன்று நாட்களுக்குப் மூன்று நாட்களுக்குப் பிறகு தோமையார் அன்னை மரியாவை அடக்கம் செய்ததை அறிந்து அன்னையின் முகத்தைக் காணவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் பயபக்தியுடன் கல்லறை மூடியைப் புரட்டினர். என்ன ஆச்சரியம்! மரியாவின் உடலை அங்கு காணவில்லை உடலைச் சுற்றி இருந்த துணிகள் மட்டும் இருந்தன.

அன்பார்ந்தவர்களே! இறைமகன் இயேசு தான் அன்னை மரியாவை தூதர் அணிகளுடன் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு அழைத்துச் சென்றார்.

**மரியே வாழ்க ! வாழ்க**



# World Environment Day

*We all know that God in Genesis first created-light, atmosphere, land, seas, lights in the sky, sea creatures and birds, land creatures and last but not the least humans-. He first dedicated his valuable time to creating everything that's around us to see and endeavour. The most important part of our being is THE ENVIRONMENT. We have so much in abundance and bountiful. We cannot even imagine a day when you haven't see any creation by god.*

*This WORLD ENVIRONMENT DAY on 5 th June let us remind ourselves pur selves this is a place we came to after their foot on this earth. We cannot afford to see it losing its essence just for our selfish desires. Each one has to be responsible for caring these resources at every instance. You and I have been around maybe for last few decades. This magnificent environment is for us to dwell in temporarily. This kingdom has seen a lot and will see a lot, only if we let it live longer.*

*Imagine one day it starts talking and narrates this story of judging. It would go something like this.*

*Long ago, there were 2 individuals who fought for each and every part of me. Name it- trees, plants, bushes, mountains, minerals, air, animals, mammals- I felt sorry for them. They wanted to rule me independently. They fought for every fruit I could provide. They tried to steal or compete with each other. I did not know why they were so delirious about my things. It was so common and lavish.*

*I wanted to invariably tell them, do not fight, I am for you. I will live for you, don't you worry, my child. Look as far as you can, it is all for you to cherish. I will not abandon you. I want you, my child, to enjoy it. Spoil yourself with every fruit that I wish to offer you. This is your moment to live to the fullest. I wonder if they were worried. I was delighted that these outwardly looking individuals could ever fight for something that is dime a dozen. Where is the need to fight? Can, they not live in harmony and share it?*

*Then came many individuals who looked alike. But did not like each other. They wanted to separate even more. Draw lines to dissect every creature and pursue to kill each other, because they loved me too much. At times, it was shameful to watch them do such a sinful act. It was worse than a nightmare. I wanted to roar and tell them, do not fight, I am for you. I will live for you, don't you worry, my child. Look as far as you can, it is all for you to cherish. I will not abandon you. I want you, my child, to enjoy it. Spoil yourself with every fruit that I wish to offer you. This is your moment to live to the fullest. The meagre me, no one listens to.*

*One day came just as I thought. I wanted to voice out. I did it, I told them, do not break me into pieces. Use me for your abundance, I have alot to give you. All my actions went to the deaf or the dumb. Instead, they thought I was upset and did not want to provide them anymore. They were presumptuous and declared that this environment is not for them anymore and tried to move to different placesspace, planet-. A place that could be better than me, who wouldn't react or shout at them.*

*How to explain, it was my love for them. I could not explain them better than this. These individuals thought I was no good, so they started abusing me, exploiting me, and throwing acid on me. Built things that I cannot stand anymore. I started falling ill and my kids started falling sick. I could not see them falling apart. Collectively, or individually, I could not do anything.*

*Now, I am left with nothing to give you in abundance. All these humans have destroyed me. They have made sure there is not trace left behind. I do not trust them. I do not have feelings for them. I might as well count days when I perish and see nothing more than this nightmare.*

*We hate it when someone is judging or condemning us. Imagine, like this story, the environment in return does exactly what we find as a nightmare.... Are we not responsible for what is happening, all those drought and famine regions in the world? What are we doing? We live in cities but go out at beach to throw away wrappers. Our picnic is outside the city, where we can be one with nature. What do we do there? end up playing loud music. We need the wreath made of fresh flowers to place, on a dead body. Once the ritual is over, we kill those beautiful flowers. Instead, are we planting any? We complain that vegetables are expensive, but we are ready to blame the people who bring them to our nearest market. Have we ever thought of the efforts one farmer put in growing them?*

*There are so many small gestures you can do for your dear environment. This summer can we place a small bowl of water for the flying creatures? Can we take that bus ticket and throw it in the dustbin after the ride instead of road? It is for us to cherish and take care of not just for us, or for future generations to come. But for the kingdom that we rent during our worldly life.*








